1334 89

ARYA DHARMAM
TAMIL WEEKLY.

REGD. No. M. 2913

ஆர்யதர்மம்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

சந்தா விபரம்.
[தபால் செலவுள்பட]

ஜீவிய சந்தா ...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா ...	ரூ. 3
ஆறுமாத சந்தா ...	ரூ. 1½

தனிப்பிரதி ஓரணா
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணா 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் பிரமாதி-ஸு மாசி-மீ 10௳ 1940 ஸு பிப்ரவரி-மீ 22௳ | ஸ-8

புதிய காங்கிரஸ் தலைவர்

மௌலானா ஆஸாத் வெற்றி

ராம்கார் காங்கிரஸுக்கு, எல்லா மாகாணங்களிலும் மௌலானா அபுல்கலாம் ஆஸாத்துக்கு ஏராளமாக வோட்டு கிடைத்து, அவரே தலைவராக தெரிந்தெடுக்கப்பட்டார். அவருக்கு 1851 வோட்டுகளும், ஸ்ரீ எம் என் ராய்க்கு 183 வோட்டுகளும் கிடைத்தன.

663 பேர் எப்பக்கத்திலும் வோட்டு கொடுக்காமல் நடுநிலைமை வகித்தார்களாம்.

பிரிட்டிஷ் பிரதிநிதிகள் இந்தியாவுக்கு வருவார்களாம்

பிரிட்டிஷ் பார்லிமெண்டிலுள்ள எல்லா கக்ஷிகளுடையவும் பிரதிநிதிகள் அடங்கிய பிரதிநிதி கோஷ்டியொன்று இந்தியாவின் ராஜீய நெருக்கடியைப்பற்றி பொதுஜன அபிப்பிராயத்தை உண்மையில் அறிந்து கொள்ளுவதற்காக வரப்போகிறதாம்!

"பிரிட்டன் வெற்றிக்காக பிரார்த்திக்கமாட்டேன்"

காந்திஜீயின் மனமாற்றம்!

ஸெட்லெண்ட் பிரபு இந்தியா விஷயமாக வெளியிட்ட அபிப்பிராயம் காரணமாக காந்திஜி மனமாறுதல் அடைந்[illegible]ட்டாராம். இந்தியாவின் சு[illegible] பிரிட்டன் அலக்ஷியம் செய்[illegible]னல், [illegible] யுத்தத்தில் பிரிட்டன் ஜயிக்[illegible]வேண்டுமென்று இனி தாம் பிரார்த்திக்க முடியாதென்று காந்திஜி வெளியிட்டிருக்கிறார்.

பிரிட்டனுக்கு ஜயம் ஏற்பட வேண்டுமென்று ஏற்கனவே காந்திஜீ சொல்லிவந்தார்.

'உயிரைக்கொடுப்பேன்'

சுப்பராயனின் வாய்வீச்சு!

டாக்டர் ஸுப்பராயன் 10௳யன்று கடலூரில் பேசுகையில்:—

"மதுரை மீனாக்ஷி கோவிலை ஹரிஜனங்களுக்கு திறந்துவிட்டது ஒரு பெரிய முக்யவேலையாகும்.

வேறுஎந்தகவர்ன்மெண்டாவது வந்து ஆலயப்பிரவேச சட்டத்தை மாற்றினால் என் உயிரைக் கொடுத்தாவது அதைக்காப்பாற்றுவேன்" என்றார்

மந்திரிகளின் ராஜீநாமா உண்மையென்ன?

மர்மம் வெளியாகிறது

காங்கிரஸ் மந்திரிகள் யுத்தம் காரணமாக ராஜிநாமா செய்துவிட்டதாகப் பெருமை சொல்லிவருகிறார்கள். கடலூரில் சில தினங்களுக்கு ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் பேசுகையில்:—

"காங்கிரஸ் மந்திரிகள் திருப்திகரமாக வேலைசெய்யவில்லை. அந்த அதிருப்தியினால்தான், ஜவஹர் நேருவும், ராஜன் பாபும் மந்திரிகளை ராஜீநாமா செய்யும்படி நிர்ப்பந்தித்தார்கள். ஸர்தார்படேலும் இந்த அபிப்பிராயத்தையே கொண்டிருக்கிறாராம்."

மதாசாரங்களால் வேற்றுமை வராது

முஸ்லீம் ஸ்திரீயின் விவேகம்

தஞ்சை ஜில்லா ஜட்ஜ் மனைவி பீகம், மிர் அம்ருத்தீன், கும்பகோணத்தில் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

தங்கள் கக்ஷிபலத்தை திரட்டிக்கொள்ளும் நோக்கத்துடனேயே சுயநலவாதிகளாகிய ராஜீய கக்ஷிக்காரர்கள் இந்தியாவில் ஜாதிமத வேற்றுமை இருப்பதாக சிருஷ்டனைசெய்கிறார்கள். முற்காலத்தில் ஒற்றுமைக் குறைவு காணவே முடியாமலிருந்தது. இப்போது வேற்றுமையை வேரூன்றச் செய்யவே முயற்சிக்கப்படுகிறது.

மதமே இல்லாமல் அழித்து தரைமட்டமாக்கிவிடச் சிலர் விரும்புகிறார்கள்.

தனித்தனி மதமிருந்தாலும் எல்லாஜாதியையும் ஒன்றாக்கிவிட வேறு சிலர் முயற்சிக்கிறார்கள்,

ஆனால் தீர்க்காலோசனை செய்தால் மதாசாரங்களில் தலையிடாமலே, பிராசீனகாலம் முதலாக இருந்துவரும் ஒற்றுமையை பலப்படுத்தி அழியாதபடி நிலவச் செய்வதுதான் விவேகமாகும்"

"வர்ணாச்ரம தர்மத்தால் தீங்கில்லை"

ஸ்ரீ எஸ் ஸ்ரீ அய்யங்கார் அபிப்பிராயம்

மதுரையில், ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் 11௳யன்று பிரஸங்கம் செய்கையில் மத விஷயமாகப் பின்வருமாறு பேசினார்:—

"நம் தேசத்தில் தலைமுறை தலைமுறையாக, முன்னோர்கள் காலம் தொட்டு மதங்கள், வகுப்புகள், பல்வேறு வர்ணாச்ரமமுறைகள் இருந்துவந்திருப்பதில் நம் நாட்டிற்கு எவ்வித தீங்கும் ஏற்ப[illegible]

ஆக[illegible]ாவிட்டால் பெர்[illegible] விடுமென்று ராஜீய வாதிகள் [illegible] பறையடிப்பதைக்கேட்டு ஏமாறவேண்டாம்.

தற்கால ராஜீய வாதிகளுடைய வாக்கு சாதுர்யத்திற்கும், உத்வேககரமான பேச்சுக்கும் பொதுஜனங்கள் மயங்கிவிடக்கூடாது"

குழந்தைகளின் ஆரோக்யம்.

பரிசுத்தமான உணவுதான் ஆரோக்யத்தை கொடுக்கவல்லது. குழந்தைகளுக்கு, அஜீர்ணம், கட்டி, மாந்தம், முதலிய எல்லாவித நோய்களும், புட்டிகளில், நாள்பட வைக்கப்பட்டிருக்கும் சேர்க்கையான உணவை ஊட்டுவதே. சிறு குழந்தைகளுக்கு, தாய்பால் குறைந்திடின் பயஸ்யா என்னும் கைகண்ட ரஸாயனத்தை, தாய்மார்கள் அருந்தவேண்டும். பயஸ்யா தாயின்பாலை மிகுதியாக வளர்க்கிறது. புஷ்டியாகவும் செய்கிறது.

கிடைக்குமிடம்:—
ATREYA AYURVEDIC WORKS,
Thennore Road, Trichinopoly.

அஹிம்ஸையைப் போல் அவச்ய ஹிம்ஸையும் தர்மமே

வைதிக ஹிந்து மதத்தின் அபிப்பிராயம்

ஸ்ரீமான் காந்தி, ஜைனம், பௌத்தம், கிறிஸ்தவம், மஹமதியம் போன்ற அவைதிக மதங்களெல்லா வற்றையும் ஒன்று சேர்த்து ஒரு புதிய கலப்பு மதத்தைக் கிளப்பிவிட்டு பாரததேசத்தையும், ஹிந்து மதத்தையும் பாழாக்கி வருகிறாரல்லவா? அதில் அவர் ஜைனர்களிடமிருந்து பூர்ண அஹிம்ஸை என்ற அபத்தக் கொள்கையைத் தூக்கிவந்து, ஹிந்துக்கள் தலையிலும் அதைச் சுமத்தி வருகிறார். அஹிம்ஸையை ராஜீய விஷயத்திலும் அவர் புகவிட்டு ஹிந்துக்களை பயங்கொள்ளிகளாயும், நபும்ஸகர்களாயும் ஆக்கி வருவதை ஹிந்துக்களே இப்போது உணர்ந்து எதிர்க்க ஆரம்பித்திருக்கின்றனர்.

காங்கிரஸுக்குள்ளேயே காந்தி கொள்கையை ஒப்பாமல் பலமாக எதிர்ப்பவர் இருப்பது தெரிந்த விஷயம். ஹிந்து மஹாஸபை போன்ற பற்பல ஸங்கங்களும் அஹிம்ஸையை ஆக்ஷேபித்து வருகின்றன, ஆகவே இந்தியாவில் காந்தி சீடர்களான மிகச் சிலர் வாயளவில் அஹிம்ஸையை ஆதரிப்பதைத் தவிர வேறு எந்த ஸங்கங்களோ, தனிபட்டவர்களோ அதை ஆதரிக்கவில்லை.

இந்த அஹிம்ஸையை ஹிந்து மதத்தின் பெயரால் காந்திஜி வற்புறுத்துவதை, மத ஆதாரத்தை முன்னிட்டுப்பலர் ஆக்ஷேபிக்க [illegible] பூர்ண அஹிம்ஸை போதிக்கப்படவில்லையென்பதைப் பல அறிவாளிகள் வெளியிட ஆரம்பித்திருக்கிறார்கள். ஸமீபத்தில், ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், [illegible] ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் போன்ற[illegible]கள், வேதத்திலும் [illegible] லிய வைதிகக் கிர[illegible] பூர்ண அஹி[illegible] லையெ[illegible]ருபணம் செய்திருக்கிறார்கள்.

ஸ்ரீமான் ஸ்ரீனிவாச அய்யங்கார் சென்ற வருஷம் ஸெப்டம்பர் 6உ யன்று பச்சயப்பன் காலேஜில் பேசும்போது குறிப்பிட்டதாவது:—

"ஹிந்து தர்மத்திலுள்ள அஹிம்ஸைக்கும், பௌத்த தர்மத்திலுள்ள அஹிம்ஸைக்கும் வித்யாஸம் உண்டு. நியாயமான கார்யங்களில் கட்டுப்பாடான ஹிம்ஸையை உபயோகிப்பதற்கு ஹிந்துமதம் விரோதமாக இருந்ததில்லை. கீதையோ, மற்ற எந்த ஹிந்து வேத புத்தகமோ பூர்ண அஹிம்ஸையை போதிக்கவில்லை."

இவ்வாறு ஸ்ரீமான் அய்யங்கார் போன்றவர்கள் கூறுவதை வைதிக மதத்தினர் ஆக்ஷேபிக்க இடமில்லை. வைதிக ஹிந்து மதமானது அஹிம்ஸையை எவ்வளவு உயர்ந்த தர்மமாக போதிக்கிறதோ, அதுபோல் சில கார்யங்களில் அவச்ய ஹிம்ஸையையும் ஓர் உயர்ந்த தர்மமாக அங்கீகரித்திருப்பதை யார் மறுக்கமுடியும்? அஹிம்ஸா தர்மத்தை வரையறையன்றியும், விலக்கு விதியின்றியும் அனுஷ்டிக்கும்படி ஹிந்துமதம் சொல்லவில்லை. ஜைன பௌத்த மதங்களுக்கும், வைதீக ஹிந்து மதத்திற்கும் ஏற்பட்ட முக்கியமான, அடிப்படையான வேற்றுமை இதுதான். அதாவது ஜைன பௌத்தாதிகள் ஒரு கர்மாவிலும் ஹிம்ஸை இருக்கக்கூடாதென்று வாதித்தார்கள். வைதிகமதத்தினர் இதை ஒப்பவில்லை. யுத்தம், யாகம், முதலிய சிற்சில கர்மாக்களில் வேதத்தின் கட்டளையைப் பின்பற்றி ஹிம்ஸை செய்ய வேண்டியது அவச்யமென்றும், அந்த ஹிம்ஸை தர்மமென்றும் நிரூபித்தார்கள். வியாஸ சங்கர ராமானுஜாதிகளான நமது ஆசார்யர்களும் இதை ஒரு மத ஸித்தாந்தமாக வெளியிட்டனர். ஆகையால் ஹிந்து மதமானது அவச்ய ஹிம்ஸையை தர்மமென்று அங்கீகரிக்கிறது.

கீதை போதிப்பதென்ன?

இவ்விஷயமாக கீதையின் அபிப்பிராயத்தைக் கவனிப்போம். கீதையானது அஹிம்ஸையை வற்புறுத்தியபோதிலும் அவச்ய ஹிம்ஸையாகிய யுத்தத்தை தர்மமாக போதிக்கிறது, கீதை பிறந்த ஸந்தர்ப்பத்தையும் இங்கு யோஜிக்க வேணும். அர்ஜுனன் ஜீவகாருண்ய புத்தி கொண்டு யுத்தம் செய்யமறுத்தான். பிராணிகளை யுத்தத்தில் கொல்லுவது பாபமென நினைத்தான். அவனுக்கு தத்வத்தைச் சொல்லி யுத்த ஹிம்ஸையை தர்மமென்று நினைத்து அனுஷ்டிக்கும்படி தூண்டவேயல்லவோ கீதா சாஸ்திரம் பிறந்தது? ஜீவகாருண்யம் அவச்யம்தான். ஆனால் அதை தகாத விஷயத்தில், தகாதசந்தர்ப்பத்தில் உபயோகிப்பதை கீதை தடுக்கிறது.

மேலும் பகவான், சரீரம்வேறு ஆத்மா வேறு என்று நிரூபணம் செய்து, சரீரமானது வஸ்திரம், சட்டை முதலியவைபோல் அடிக்கடி மாற்றிக்கொள்ளக் கூடியதென்றும், ஆதலால் சரீரம் மறைவதில் விவேகிகள் துக்கம் காட்ட காரணமில்லையென்றும், ஆத்மாவானது நித்யமென்றும், அதை எவனும், எப்போதும், கொல்லவோ, வெட்டவோ, கொளுத்தவோ முடியாதென்றும் ஆதலால் கொல்லுவது ஓர் ஹிம்ஸையாகாதென்றும் நிரூபணம் செய்கிறார். தவிர, [illegible] னறும், அந்த தர்மத்தைச் செய்து தீரவேண்டுமென்றும் உபதேசிக்கிறார்.

"க்ஷத்திரியனுக்கு யுத்தமானது ஸ்வதர்மமாகையால் அதைச் செய்ய நீ பயப்படக்கூடாது. தர்மமான யுத்தத்தை விட க்ஷத்திரியனுக்கு வேறு சிரேயஸ் கிடையாது"

"நீ யுத்தத்தில் இறந்தாயானல் ஸ்வர்க்கத்தை அடைவாய், ஜயித்தாயானல் ராஜ்யத்தை அடைவாய்,'

"இத்யாதிகளான உபதேசங்கள் அஹிம்ஸா வாதிகளுக்கு மிகவும் விருத்தமானவை. ஸ்ரீ சங்கர ராமாநுஜாதி ஆசாரியர்கள், க்ஷத்திரியனுக்கு யுத்தமானது வர்ணாச்ரம தர்மத்தில் சேர்ந்த புனிதமான நித்ய கர்மாவாகுமென்றும், அது மோக்ஷ ஸாதனமென்றும் கீதை பாஷ்யத்தில் அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறார்கள். ஆதலால் நியாயமான யுத்த தர்மத்தைச் செய்யா விட்டால், பாபம், ஏற்படுமென்றும் தெரிகிறது. இதை பகவானும் சொல்லுகிறார்.

"இந்த தர்மமான யுத்தத்தை, நீ செய்யாது விட்டால், அதனல், ஸ்வதர்மத்தை இழந்து கீர்த்தியை இழந்து, பாபத்தை அடைவாய்"

இதில் "பாபத்தை அடைவாய்" என்று பகவான் சொல்லுவதிலிருந்து யுத்தத்தை கைவிட்டால் பாபம் வருமென்பது ஸ்பஷ்டமாகிறது. இதிலிருந்து சாஸ்திர விஹிதமான அவசிய ஹிம்ஸையாகிற யுத்தத்தை விடுவது பாபமென்றும், பரலோக பாதகமென்றும் ஏற்படுவதால் யுத்த ஹிம்ஸையே உயர்ந்த தர்மமாக நிர்ணயிக்கப்பட்டதாகிறது. ஆகையால் இந்த யுத்த ரூபமான ஹிம்ஸையானது உயர்ந்த தர்மமென்றும் விடத் தக்கதல்ல வென்றும் கீதை ஸ்பஷ்டமாகச் சொல்லுகிறதென்பது மறுக்க முடியாது.

வேதத்தில் அவச்ய ஹிம்ஸாவிதி.

நமது வேதங்களிலும், ஸ்மிருதிகளிலும் அனேக கர்மங்களில் ஹிம்ஸையானது விதிக்கப்பட்டு அது தர்மமாகவும் சொல்லப்படுகிறது. வேதங்களின் கர்மகாண்டங்களில். கோமேதம், அச்வமேதம், ராஜஸூயம் அஜமேதம், பேன்ற கணக்கற்ற நித்ய, நைமித்திககாம்ய, யாகங்கள் விதிக்கப் பட்டிருக்கின்றன. அவைகளில் பிராணி ஹிம்ஸையை வேதங்களே விதிக்கின்றன. அந்த தர்மஹிம்ஸைகளை அநுஷ்டிக்காமல் விட்டால் பாபமும் பிராயச்சித்தமும் ஏற்படுகிறதாகத் தெரிகிறது. பௌத்தாதிகள் யாகஹிம்ஸையையும், அதைப்போதிக்கும் வேதத்தையும்கண்டித்தனர். ஆனல் ஸ்ரீவியாஸபகவான் பிர்ம்மஸூத்திரத்தில் இதற்காக ஓர் பிரகரணம் ஏற்படுத்தி, யாகஹிம்ஸையானது வேதவிஹிதமாகையால்' தர்மமென்றும், விடக்கூடியதல்லவென்றும், ஸித்தாந்தம் செய்தார். இதை ஸ்ரீசங்கர ராமானுநுஜ மத்வ ஆசாரியார்கள் அங்கு வெகு பலமாகத்தாங்கி எழுதி, யாக ஹிம்ஸை தர்மமென்றார்கள். இந்த இடத்தில் ஸ்ரீசங்கரபகவத் பாதசாரியாள் தமது பாஷ்யத்தில் கூறியுள்ள நியாயமானது தற்கால அஹிம்ஸாவாதிகளின் மதி மயக்கத்திற்கு மருந்து போலிருப்பதால் யுக்திவாதிகள் அதை கவனிப்பது அவச்யம். அந்த வாக்யமாவது:—

"शास्त्रहेतुत्वात् धर्माधर्म विज्ञानस्य । अयं धर्मोऽयमधर्म इति शास्त्रमेव विज्ञानेकारणम् । अतीन्द्रियत्वात् तयोः । नियतदेश कालनिमित्तत्वाच्च यस्मिन् देशे, काले, निमित्ते च यः धर्मः अनुष्ठीयते, सः देशकाल निमित्तान्तरेषु अधर्मो भवति । तेन, न शास्त्रादृते धर्मा धर्म विषयं विज्ञानं कस्यचिदस्ति ।। शास्त्राच्च हिंसानुग्रहात्मकः ज्योतिष्टोमः धर्म इति अवधारितम् । सकथं अशुद्धइति शक्यते वक्तुं ।।"

அதாவது:-

"தர்மா தர்மாங்களை அறிவதற்கு சாஸ்திரமே மூலமாகும். இது தர்மம், இது அதர்மம் என்பதை அறிய சாஸ்திரமே காரணமாயிருக்கும். தர்மாதர்மங்கள் பிரத்யக்ஷத்தை மீறியவைகளல்லவா? அவை தேசம் காலம், நிமித்தம் இவைகளால் வரையறுக்கப்பட்டிருப்பவை, அதாவது, எந்த தேசத்தில், எந்த காலத்தில் எந்த நிமித்தத்திலும் எந்த ஒன்று தர்மமாக அநுஷ்டிக்கப்படுகிறதோ, அதுவே, மற்றொரு தேச கால, நிமித்தங்களில் அதர்மமாக ஆகிவிடுகிறது. ஆதலால் ஒருவனுக்கு தர்மாதர்ம விஷயமான ஞானம் உண்டாவதற்கு சாஸ்திரத்தை விட்டு வேறு கதி கிடையாது, அந்த சாஸ்திரத்தினல், ஹிம்ஸையுடன் அநுமதிக்கப்பட்ட ஜ்யோதிஷ்டோமாதி யாக[illegible]ள் தர்மங்களென்று நிச்சயிக்கப்பட்டி[illegible]றன. [illegible]ஆகையால் அந்த யாகத்தை அசுத்த மெ[illegible] எப்படிச் சொல்ல முடியும்"

ஆதலால், ஹிம்ஸை, அஹிம்ஸை இரண்டையும் நிச்சயிக்க சாஸ்திரமே கதியாகும். யுக்திவாதம் உபயோகப்படாது. யுத்த ஹிம்ஸையையே இதற்கு உதாஹரணமாகப் பார்க்கலாம்.

யுத்த ஹிம்ஸை

யுத்தத்தில் எதிரியை கோரமான ஆயுதத்தால் கொலை செய்கிறார்கள். அடிபட்டவன் பரிதாபகரமாகத்துடித்து ரத்தத்தில் விழுந்து புரண்டு தனது அரியபிராணனை விடுகிறான் இந்தக் கொலையைச் செய்தவருக்கு தண்டனை கிடையாது. ஸம்மானங்களும் பிரும்

(தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க)

வாரக்குறிப்பு

(ஸ்ரீ வத்ஸ. வே. ஸோ. சர்மா)

போல்லாத வாரம் !! சென்றவாரம் உலகிற்கே விசேஷமாக இந்தியாவிற்கும் மிக பொல்லாத வாரமாம் ! கல்கத்தாவில் ஆலை வேலை நிறுத்தம் ! பாம்பேயில் 150 கைதிகள் உண்ணுவிருதம் ! ஸிந்துவில்மந்திரிஸபை ராஜிநாமா பாண்டிச்சேரியில் கிறிஸ்தவர் வகுப்பு சண்டை ! வேலூரில் 144 ப்ரயோகம் ! மற்றும் பலபல கணக்கிலடங்காதன,

மஞ்சப் பெட்டி போமா ? தேசிய சபை மஞ்சள் பெட்டி மங்களம் என ப்ரசாரம் செய்தது. அதன் எதிரிகளும் அதனுல் வந்த தீமை என அதை ப்ரசாரப்படுத்தி விட்டனர். இனி வரும் தேர்தல்களில் அதிகாரிகள் இஷ்டம் வர்ணப்பெட்டி அளிப்பது. சில பத்ரிகைகள் புலம்புகின்றன. கழுதையை நிறுத்தினுல் கூட ஜயம் என்று டம்பம் பேசுபவர் இதற்கஞ்சுவதேன் ?

அவகாசமளித்துப் பார் !! பொதுஜன ஸேவை என்பது தனிப்பட்டவர், அல்லது ஓர் கூட்டத்திற்குக் சொந்தமானதல்ல. வங்க வீரர் வேண்டியபடி குறிப்பிட்ட காலம் வரை அவரிடம் ஸகல வேலைகளையும் ஒப்படைத்து பயன்படாவிடில் பழயபடி காந்தி கோஷ்டியாரே ஏற்கலாம். 4 மாதங்களில் வகுப்பு ஒற்றுமையை உண்டுபண்ணுவேன் என்கிற ஸ்ரீ எஸ். ஸீனிவாஸய்யங்காருக்கும் அவகாசம் கொடுத்துப் பார்க்கலாம்.

நல்லதே! ஆயினும் பயனுண்டோ ? வகுப்பு வாத தீ கொழுந்து விட்டெரியும்போது தேசிய ஸபைத் தலைவராக மௌலான அப்துல்கலாம் அஸாத் தேர்ந்தெடுக்கப்பட்டது சிறந்த ராஜ்ய தந்திரமே. ஆயினும் ஜின்ன கோஷ்டி வணங்கி வருமோ ?

உண்மைஇல்லாமலில்லை !! வாக்குபலத்தைக்கொண்டு எவர் என்ன சொலலியுங் கேளாத ராஜாஜிபோன்றவர் ஆக்ஷிவெறுக்கத்தக்கதே! ஜநநாயகம் இந்தியாவுக்கே உதவாதென ஜின்ன வற்புறுத்துகிருர் ! அந்தந்த வகுப்பும், தனக்கு ப்ரியமானவரைத் தேர்ந்தெடுத்து அவர்களால் தேர்ந்தெடுக்கபடும் மந்திரிகளைக் கொண்டு ஆக்ஷி நடத்தினுல் குறையிராது.

சும்மா சுற்றுவரா? பலவகையினும் தேசிய ஸபை பலஹீனப்பட்டுளது. ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸயங்கார் தொழிலை விட்டு விட்டு மறுபடியும் தேசியத்தொண்டில் இறங்கி விட்டார். அவரைப் பலர் ஆதரிக்கின்றனர்! ராஜங்கஸபை தேர்தலில் ராஜாஜி சும்மாயிப்பரா? சுற்றுகிருர்! சுற்றுகிருர்!! இதில் அவர் உண்மையைக் காணுவிடில் ராஜ்ய தந்த்ரம் சூன்யமே!!

நிருபர் பக்ஷபாதமா? தார்மிக தலைவர்கள் பல இடங்களில் சுற்றுப்ராயணம் செய்து வ. ஸ்வராஜ்ய சங்கங்களை ஏற்படுத்த; ஒரு பத்திரிகையிலாவது விஸ்தாரமாக காணவில்லை; நிருபர்களுக்கே தர்ம ஸபையைக்காண கண் கூசிற்றே? அல்லது அவர் எழுதியும் ஆசிரியர்கள்தான் பிரசுரிக்க கூடாததென விட்டனரோ?

ரயில் சத்தமும் ஏறிற்று? அரசாங்கம் மார்ச்சு முதல் ஷை சத்தத்தை ரூபாயுக்கு ஒரு அணு வீதம் ஏற்றப் போகிறது. இனி உலக வாழ்க்கை பெருந் துன்பமாகிவரும்! கூடிய வரை ப்ரயாணத்தைக் குறைத்து கொள்வது நலம்.

புராணம் ஸத்யமாகிறது ! சென்னையில் விட்டுவரி அதிகமாவதைக் கண்டிக்ககடந்த கூட்டத்தில் வரிப்பளுவால் ஊரைவிட்டு ஓடுவது ஓர்வழி என்ருர் ஒருவர் இங்ஙனம் கலியில் நேரும் என புராணக்கூற்று.

மதிப்புரை.

ஸ்ரீ பகவத் ராமாநுஜ க்ரந்தமாலா

மேற்கண்ட பெயருள்ள உத்தம க்ரந்தமொன்று நமது விமர்சனத்திற்கு வந்துளது. விசிஷ்டாத்வைத ஸம்பிரதாய ஸம்ரக்ஷகரான ஸ்ரீ பாஷ்யகாரர் என்கிற ஸ்ரீ பகவத் ராமாநுஜர் உலகம் உஜ்ஜீவிக்க வேண்டி பரம கருணையால் அருளிச்செய்த கிரந்தங்கள் ஏழு. ஸ்ரீ பாஷ்யம், வேதாந்த தீபம், வேதாந்த ஸாரம், கீதா பாஷ்யம், வேதார்த்த ஸங்கிரஹம், நித்யக்ரந்தம், கத்யத்ரயம் ஆகியவை.

விசிஷ்டாத்வைத மதப்ரக்ரியைகளும், அவ்விஷயமான ஆக்ஷேப ஸமாதானங்களும், ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தின் அடிப்படையான கொள்கைகளும், இவ்வேழு க்ரந்தங்களில் வெகு தெளிவாயும், ஸாரமாயும் ஸ்ரீ பாஷ்யகாரரால் அருளிச் செய்யப்பட்டிருக்கின்றன. அக்கிரந்தங்களின் மஹிமையைப்பற்றி இங்கு அதிகம் குறிப்பிட வேண்டியது ப்ரகிருதமில்லை.

மேற்படி ஏழு கிரந்தங்களையும் ஒரே ஸம்புடத்தில் சேர்த்து அச்சிட்டு "ஸ்ரீ பகவத் ராமநுஜ கிரந்தமாலா" என்ற பெயருடன் இப்போது வெளியிடப்பட்டிருக்கிறது. இம்மாலையில் அடங்கிய கிரந்தங்கள் பெரும்பான்மையும் தனித் தனியாகப் பலரால் அச்சியற்றி வெளிப்படுத்தப்பட்டிருப்பினும் ஸ்ரீ எம்பெருமானுர் அருளிச்செய்த எல்லா க்ரந்தங்களையும் ஒன்று சேர்த்துத் தொடுத்து கிரந்த மாலையாக இதற்கு முன் ஒருவரும் வெளிப்படுத்த முன் வரவில்லை.

ஆகலால் இம்மாலை, சிறந்தோர் எவரும் சிரமேல் வைத்துக் கொண்டாடிக் குதூஹலிக்கும் வண்ணம், வெகு அழகாக மனதைக் கவரும் ரீதியில் அமைந்து வெளி வந்திருப்பது பெரும் பாக்யமென்றே சொல்ல வேணும்.

முகவுரையில் கண்டிருக்கிறபடி இரு மஹா வித்வான்கள் சோதித்திருந்த தாளபத்ர ஸ்ரீ கோசங்களையும், வேறு ஸ்ரீ கோசங்களையும் வைத்துக்கொண்டு ஸ்வாரஸ்ய பராமர்ச பூர்வகமாக இம்மாலை பதிப்பிக்கப்பட்டிருப்பதால் முன் பதிப்புகளில் காணுத சில பாடபேதங்களும் இதில் காணப்படுகின்றன.

பாட பேதங்களைப்பற்றி அபிப்பிராய பேதங்களும் ஏற்படக் கூடுமாயினும், இதில் காணும் பாடங்களே பெரும்பாலும் ஸ்வரஸதமங்கள் என்பது நமது அபிப்பிராயம். இக்கிரந்தம் வெகு அழகான பயிண்டுடன், நல்ல பேப்பரில், ரமணீயமான தெலுங்கு லிபியில் பதிப்பிக்கப்பட்டு விளங்குகிறது. புஸ்தகத்தின் தோற்றமே அத்புதமாக மனதைக்கவரும்வண்ணம் அமைந்துள்ளது. இதுவரையில் ஒருவரும் செய்ய முன் வராத இவ்வுத்தம கைங்கர்யத்தைச் செய்து உபகரித்த உதாரியின் திருநாமத்தை உலகம் அறிய ஆவல் கொள்ளுவது இயற்கை.

ஸ்ரீ காஞ்சிபுர வாஸியும், வேதவேதாந்த வைஜயந்தீ வித்யாலயாத்யக்ஷருமான ஸ்ரீஉ. வே. வித்வான், பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய ஸ்வாமி தான் அம்மாலையை அச்சிட்டு பிரசுரம் செய்திருக்கிருர். மிக பிரஸித்தி பெற்ற இம்மஹா வித்வானையும், நாம் அறிமுகம் செய்து வைக்க வேண்டுமோ? ஸம்பிரதாயத்திற்கு அவர் செய்துவரும் அளவற்ற உபகாரங்களையும் நாம் சொல்லவேண்டியதில்லை. இம்மாதிரி பெரிய உத்தம கைங்கரியம் புரிந்து உலகினர்க்குஉபகாரம்செய்யும் மஹத்தான எண்ணத்துடன் அந்த ஸ்வாமி செய்துள்ள

ஆச்சாள்புரம்

மஹாகும்பாபிஷேகவைபவம் ஸனுதனப் பிரசாரம்

இவ்வூர் பிரபலதனவந்தரும் தார்மிகருமான ஸ்ரீமான் வெங்கடேசம் பிள்ளையவர்களது சொந்தத் திருப்பணியில் ஸ்ரீ சக்ரேச்வர ஸ்வாமி ஆலயத்தில் ஸ்ரீ வல்லீ தேவஸேனு ஸமேத ஸ்ரீ ஷண்முக மூர்த்திக்கும், பரிவார தேவதைகளுக்கும் தைமீ 27உ கட ஸ்தாபனஞ் செய்து 30உ வ்ருஷப லக்னத்தில் மஹா கும்பாபிஷேகமானது உள்ளூர் சாஸ்த்ர பாடசாலை ஆகம பண்டிதர் ப்ரம்மஸ்ரீ வைத்யநாதசிவாசார்யரது அத்யக்ஷதையில் இலந்துறை, ஸமரஸ குடீரம் ப்ரம்மஸ்ரீ சிவாசார்ய கங்கா ஜடேசசர்மா அவர்கள் ப்ரதான ஆசார்ய ஸ்தானம் வஹித்து மற்றும் பல சிவாசார்யர்களுடனும், ரிக், யஜுஸ், ஸாமவேத பாராயணத்துடனும் தேவார திருவாசக திருப்புகழ் கானத்துடனும் பக்தி ச்ரத்தையாகவும் சாஸ்த்ரோக்தமாகவும் நடைபெற்றது மிகவும் கொண்டாடத்தக்கதே.

28உ மாலை 3 மணிக்கு ஆஸ்திக பக்த சிகாமணிகள் குழுமியுள்ள மஹாஸபையில் ஆகம பாடசாலை, பண்டிதர் ப்ரும்மஸ்ரீ வைத்யநாத சிவாசார்யரவர்கள் அக்ராஸனம் வஹித்து "சிவாகமம்" என்ற விஷயம் பற்றி முகவுரை ப்ரஸங்கமும், சிவபுரம், ஸ்ரீ ஸ்வாமிநாத சிவாசார்யர் "சிவ மஹிமை" என்பது பற்றியும் இலந்துறை, "ஸமரஸகுடீரம்" கங்கா ஜடேச சர்மா அவர்கள் "கலிதோஷ நிவர்த்தி மார்க்கம்" என்பதைப் பற்றி பல ஸம்ஸ்க்ருத, தமிழ் மேற்கோள்களுடன் பண்டிதபாமர ரஞ்சிதமாக ஆலயபரவேசம் முதலிய துராசாரங்களைக் கண்டித்தும் "ஆர்யதர்மம்" சைவ சாஸ்த்ர பரிபலனம்" என்னும் ஆஸ்திக ஸனுதன பத்ரிகைகளை அனைவரும் ஆதரிக்கவேண்டியது அவச்யம் என்றும் நன்குஉபந்யஸித்தபிறகு ஸ்தோத்ரத்துடன் நன்கு பூர்த்தியாயிற்று.

இக்கார்யத்திற்கு ஸம்பிரதாய அபிமானிகள் செய்யக் கூடிய கைம்மாறு என்னவிருக்கிறது ? இக்கைங்கர்யம் மூலமாகஅநிதரஸாதாரணமாக ஆசார்ய க்ருபைக்குப் பாத்ரமாகும்பாக்யம்பெறற அந்த ஸ்வாமியை நாம் மனமாற வாழ்த்துகிறேம். இதைப்போன்றஇன்னும் பல க்ரந்தமாலைகளை வெளிப்படுத்த ஸகல ஸௌகர்யங்களும் பொருந்திய அந்த ஸ்வாமி, தாம் நினைத்திருக்கிறபடி மற்ற ஆசாரியர்களின் கிரந்தங்களையும் வெளியிட முன்வருவாரென்று எதிர் பார்க்கிறேம். இவருடைய உத்தம ப்ரவிருத்திகளுக்கு ஸ்ரீ கோமளவல்லீ ஸமேத ஸ்ரீ ஆராவமுதன் அருள்புரிய வேண்டுகிறேம்.

இவ்வளவு உயர்ந்த புஸ்தகத்திற்கு ஆறு ரூபாய் மட்டும் க்ரயம் வைத்திருப்பது, இதனை எல்லா ஸஹ்ருதயர்களும் பெற்று மகிழவேண்டுமென்ற பதிப்பாசிரியரின் பரந்த நோக்கத்தையே காட்டுகிறது.

தேவாலயங்கள், மடங்கள், பொதுப் புஸ்தக சாலைகள் முதலிய எல்லாவிடங்களிலும் இந்தக் கிரந்தம் இருக்க வேண்டியது அவசியமாகும். இது தவிர, ஒவ்வொரு ஆஸ்திகர்களின், திருமாளிகையிலும் இந்த ஸ்ரீ கோசம் ஒன்றை உடனே வாங்கி வைத்துக்கொண்டாடுவது மிக அவசியமாகும்,

விலை ரூ. 6—0—0.

கிடைக்குமிடம் :— ஸ்ரீ உ. வே. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி சின்ன காஞ்சிபுரம்.

மஹா மஹோபாத்யாய
ரா. வே, கிருஷ்ணமாசாரியர்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-௵ மாசி-௴ 10௳

சுதேச ஸமஸ்தான்களை வெறுப்பதா ?

இந்தியாவிற்கு பூர்ண ஸ்வேச்சை வேண்டுமென்பதை இந்தியா மந்திரி ஸெட்லண்டு பிரபு கேலி செய்கிறார். சுதேச சமஸ்தான அரசர்களும் பொது ஜனங்களும் பிரிட்டனை விட்டுப் பிரிய இஷ்டபபடவில்லை யென்று அவர் கூறுகிறார். எற்கனவே சுதேச அரசர்களின் ஜன்ம விரோதியாயுள்ள காங்கிரஸ்காரர்களுக்கு இது இன்னும் ஆத்திரத்தைக் கொடுத்திருக்கிறது. காந்திஜி ஓர் கட்டுரை இதைப்பற்றி எழுதியுள்ளார். பிரிட்டன், தனக்கு பின் பலமாக சிருஷ்டித்துள்ள நான்கு தூண்களில் சுதேச ஸமஸ்தானமும் ஒன்று என்று காந்திஜி கண்டிக்கிறார். அதாவது பிரிட்டனின் நலத்தைக் காத்துக் கொடுத்து அதற்கு அடிமையாயிருந்து, அதன் புன் சிரிப்பிலேயே ஸமஸ்தான மன்னர்கள் வாழ்ந்து வருகிறார்களென்று அவர் கூறுகிறார்.

காந்திஜி, நேரு போன்ற தலைவர்களும், மற்ற காங்கிரஸ் வாதிகளும் நமது சுதேச அதிபதிகளை வெகு கேவலமான பாஷையால் தாக்கியும், பயமுறுத்தியும் அங்கு கிளர்ச்சி செய்யப் பொது ஜனங்களைத் தூண்டியும் பெரிய அமளி நடத்தி வருவது தெரிந்த விஷயம். இந்தியாவிற்கு பூர்ண ஸ்வராஜ்யம் வருமுன் போ, அல்லது வந்தவுடனேயோ சுதேச அரசர்களை ஒழிப்பது அவர்களது வேலைத் திட்டமாயிருந்து வருகிறது.

காங்கிரஸ் மந்திரி பதவி ராஜிநாமாவுக்குப் பிறகு காந்தி கோஷ்டியார் சுதேச ஸமஸ்தானங்கள் மீது சீறி விழுவது மிகவும் அதிகரித்து வருவதைக் காண்கிறோம். மரியாதையற்ற கேவலமான பாஷைகளால் கூட அந்த அரசர்களை காங்கிரஸ் வாதிகள் தாக்கி வருகிறார்கள்.

தங்கள் சொந்த விருப்பு, வெறுப்புக் காரணமாக ஒன்றை, வைக்கவும், அழிக்கவும் இவர்கள் முற்பட்டிருக்கிறார்கள். இந்த ஆக்ரமக்கொள்கை இந்தியாவிற்கும் இந்தியா நாகரீகத்திற்கும் ஏற்றதன்று. அரசர்களுக்கு ஏற்பட்டுள்ள கௌரவங்களெல்லாம் அவர்களுடைய சொந்த கௌரவத்தை முன்னிட்டு எற்பட்டதில்லை. அவர்கள் வகிக்கும் புனிதமான ஸ்தானத்தை உத்தேசித்தே ஏற்பட்டவை. அதனாலேயே அரசன் பாலனாக இருந்த போதிலும், மனிதனென்கிற எண்ணத்தால் அவனை அவமதிக்க கூடாதென்றும், அவன் தெய்வாம்சம் பொருந்திய வனென்று மதிக்கப்படவேணுமென்றும் நமது முன்னோர்கள் விதித்தார்கள். இந்த கௌரவம் அரசஸ்தானத்தையே பொறுத்தது.

ஸுதேச ஸமஸ்தானங்களை விரட்டி அதிகாரம் செய்ய காங்கிரஸ் வாதிகளுக்கு என்ன உரிமை? இவர்கள் ஸம்ஸ்தான பிரஜைகளா? அல்லது இந்தியாவிலுள்ள ஹிந்துக்களனைவரின் பிரதிநிதிகளா? அல்லது ஸுதேச அரசர்களை யுத்தத்தில் வென்று அந்த ராஜ்யத்தை காந்தி கோஷ்டியார் வசப்படுத்திக் கொண்டிருக்கிறார்களா? ஸுதேச அரசர்களைக் கண்டிக்கவும், அவர்களுக்கு நிபந்தனை விதிக்கவும், பயமுறுத்தவும் இவர்கள் என்ன யோக்யதை யுள்ளவர்கள்? ஜனங்களை ஏமாற்றும் வழிகளான, உபவாஸம், ஒத்துழையாமை சட்ட மறுப்பு போன்ற வேஷங்களைக் கொண்டு தானே இவர்கள் பிரபலர்களாக ஆகிவிட்டார்கள்? க்ஷத்திரிய தர்மத்தாலோ புஜ பல பராக்ரமத்தினாலோ அவ்வரசர்களை காங்கிரஸ்கார் ஜயித்தார்களா? வெறும் ஆடம்பர ஆள் கூட்டங்களைக் காட்டி பயமுறுத்துவதற்கும், தூஷணை செய்வதற்கும் அரசர்கள் பயப்படக் கூடியவர்களோ? ராஜ்கோட், திருவிதாங்கூர், மைசூர், பரோடா போன்றவை காங்கிரஸுக்குத் தக்கபாடம் கற்பித்து விடவில்லையே?

ஹைதராபாத் அரசரிடம் காங்கிரஸ் கோஷ்டியார் வீர்யம் காட்டினார்களா? ஸுதேச அரசர்கள் இந்தியாவின் பிராசீன நாகரிகத்தின் ஓர் சின்னமாக விளங்குபவர்கள், அந்நிய அநாகரிகம் நம் தேசம் எங்கும் பரவி நமது ஆசாரம், மதம், பாஷைகளை முதலியவைகள் சீர்குலைக்கப்பட்டு வருகையில், ஸுதேச ஸம்ஸ்தானங்களே மேற்கண்டவைகளை ஒருவாறு காப்பாற்றி வருகின்றனவென்று ஸ்ரீமான் ஸவர்க்கார், டாக்டர் மூஞ்ஜே முதலியவர்கள் கூறுகிறார்கள். ஆதலால் இந்திய ஸம்ஸ்தானங்கள் என்று அழிக்கப்படுகின்றனவோ அன்றே இந்தியாவும் அழிந்து விடுமென்று ஹிந்துஸபைத் தலைவர்கள் கூறுவதில் பூர்ணமாக உண்மையிருக்கிறது. காங்கிரஸ் வாதிகள் தேசத்தில் எல்லாவகையிலும் புரட்சியை உண்டாக்கி இந்திய நாகரிகாதிகளே நசித்துப் போகும் வரையில் வேலை செய்வதால் அவர்களுடைய பிரவிருத்தியை ஹிந்துக்கள் தீவ்ரமாக கண்டிக்க முன் வரவேண்டுமென்று ஸ்ரீமான் ஸ்வர்க்கார் கூறியுள்ளார்.

ஹிந்து, முஸ்லீம், ஒற்றுமையென்கிற கனவினால் பீடிக்கப்பட்டுத்தான் காந்தி கோஷ்டியார் ஸுதேச அரசர்களை வெறுக்க முற்பட்டிருப்பதாயும் ஸ்ரீமான் ஸவர்க்கார் சொல்லியிருக்கிறார். இதிலும் உண்மையிருக்கிறது. ஸமஷ்டி அரசியலை காங்கிரஸ் எதிர்ப்பதிலும் இந்த நோக்கம் தான். ஹிந்து சுதேச ஸம்ஸ்தானங்களே அதிகம். முஸ்லீம் ஸம்ஸ்தானம் வெகு சிலவையே. ஆகவே ஸமஷ்டியில் ஹிந்து ஸம்ஸ்தானங்களின் பிரதிநிதிகள் அதிகமிருப்பார்களல்லவா?

குறிப்புகள்

ஆலயப்பிரவேசம் பற்றி ஸி. ஆர். பேச்சுக்கள்

மாஜி அவசரச்சட்ட மந்திரியாகிய ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் தமது தென்னிந்திய சுற்றுப்பிரயாணத்தில், தான் செய்துவிட்ட பெருத்த அதர்மச்சட்டத்தைத்தாங்கிப் பலவிடங்களில் பலவிதமாகப் பேசியிருக்கிறார். குற்ற முள்ள நெஞ்சுக்காரன் பிதற்றுவது போல், முன் பின் விருத்தமாயும் இன்ன சொல்லுகிறோமென்று தனக்கே தெரியாத ரீதியிலும் என்னவோ பேசியிருக்கிறார், அவருடைய அபத்தப் பேச்சுகளை விமர்சிப்பது மணல் சோற்றில் கல் ஆராய்வது போல் பிரயோஜன மற்ற வேலையேயாகும்,

ஆயினும் சில விடங்களில் அவர் பேசியுள்ள போக்குக்கு நாம் பதில் கூறவேண்டியது அவச்ய மென நினைக்கிறோம். சிதம்பரத்தில் ஸ்ரீமான் ஆசாரியர் பேசுகையில்:—

> "ஸனாதநிகள் ஆங்கிலேயர்களிடம் போய், திறந்த கோவில்களை மூடுங்கள் என்று கேட்கிறார்கள். சண்டையோ சச்சரவோ நம்முடன் தான் போட வேண்டுமே தவிர அயலாரிடம் முடியுமா? ஆங்கிலேயர்களுக்கும் நமது கோவில்களுக்கும் என்ன ஸம்பந்தம்? ஸனாதநிகள் செய்வது ஸரியல்ல. பூர்ண்ஸ்வதந்திரம் வந்தால் எல்லாக் கோவில்களையும் திறந்து விடுவார்களே அப்பொழுது ஸனாதநிகள் என்ன செய்வார்கள்! ஆலயப் பிரவேசத்திற்கு காரண பூதர்களாயுள்ளவர்களிடம் ஆக்ஷேபித்து ஜயம் அடைவதே நியாயமானவழி,,

என்று கூறியிருக்கிறார். ஸனாதநிகள் வைஸ்ராய் கவர்னர் முதலியவர்களிடம் முறையிட்டுக் கொள்வதை இவர் கேலி செய்கிறார். வைஸ்ராயும், கவர்னரும் அரசரின் பிரதிநிதிகள். பிரஜைகளின் ஹிதங்களை கவனிக்க வேண்டிய அதிகாரம் வஹிப்பவர்கள். காங்கிரஸ் மந்திரிகளை வேளியே தள்ளும் அதிகாரம் கூட இன்னும் அவர்கள்கையில்தான் இருக்கிறது. ஆகவே தேசத்தை ஆளுகிறவர்களென்ற முறையில் அவர்களிடம் நமது குறைகளைத் தெரிவிக்காமல் வேறு யாரிடம் தெரிவிப்பது?

முஸ்லீம்களுக்கு இது பிடிக்காதது ஸஹஜம். ஆதலால் அவர்கள் ஸமஷ்டியை எதிர்க்கிறார்கள். ஹிந்து ஸபையோ ஸமஷ்டியை ஆதரிக்கிறது. ஆனால் காங்கிரஸ் எதிர்ப்பதின் நோக்கமென்னவென்றால் முஸ்லீம்களுக்கு திருப்தியுண்டுபண்ணவேயாகும். இது ஸ்வஜன த்ரோஹமென்று ஸ்ரீ ஸவர்க்கார் வர்ணிக்கிறார்.

எப்படியும் காந்தி கோஷ்டியார் இப்போது தேசத்தில் சுதேசஸமஸ்தானத்தைப் பற்றி வெகு குரூரமான முறையில் தாக்கி வருவதை ஹிந்து ஸமூஹம் பொறுத்திருக்காது. இது அந்தந்த சுதேச ஸமஸ்தானத்தைப்பற்றிய விஷயம் மாத்திரமல்ல. அகில இந்தியாவையும் பொறுத்தது. காங்கிரஸ் கிளர்ச்சி வலுக்குமானால் அதன் மூலம் தேசத்தில் பெருத்த க்ஷோபமும், ரத்தக்களரியும் கூட ஏற்படுமோவென்று நாம் அஞ்சுகிறோம்.

இந்தியாவுக்கு சுயேச்சை, சுயநிர்ணயம் வேண்டுமானால் ஆங்கிலேயரைத் தான் காங்கிரஸும் கேட்க வேண்டியிருக்கிறது. இதற்காக வைஸ்ராயிடம் காந்திஜி எத்தனை தடவை போகிறார்? காந்தியோ ராஜன் பாபுவோ, ஸி, ஆர். ஆசாரியரோ இந்தியாவிற்கு சுயேச்சை வழங்கி விட முடியுமா? காங்கிரஸ்காரர் ஆங்கிலேயரிடம் மண்டி போட்டு பெறும் வரையில் அவர்கள் ஸனாதனிகளைப் பரிஹஸிக்க வாயுண்டா? ஆலயப் பிரவேச அவசரச் சட்டத்திற்காக இந்த ஸி, ஆர். கவர்னிடமும், வைஸ்ராயிடமும் சரணாகதி செய்யவில்லையா? காந்தியைத் தூதுவிட்டு சிபார்சு பண்ணி வைஸ்ராயிடம் ஆலயப்பிரவேசச் சட்டத்திற்கு ஸம்மதி வாங்கவில்லையா? ரங்கய்யர் ஆலயப்பிரவேச மசோதாவுக்காக ஆதரவு பெற இவர் டில்லியில் ஆங்கிலேயர், மஹமதியர் முதலிய அந்நியர்கள் விட்டு வாசலில் பழி கிடக்கவில்லையா? ஸர்,பெர்டிராண்ட்ரஸ்ஸல் போன்ற சீமை வெள்ளைக்காரர்களிடம் ஆலயப்பிரவேசத்தை ஆதரிக்கும்படி சிபார்சுக்கு இவர் ஓடவில்லையா?

" ஆங்கிலேயர்களுக்கும் நமது கோவில்களுக்கு என்ன ஸம்பந்தம்,, என்று இன்று கூறும் ஸி. ஆர். முன்பு தமது கார்ய ஸித்திக்காக ஆங்கிலேயரையே அநுஸரித்ததை மறந்து விட்டாரா? அல்லது ஏமாற்றுகிறாரா? தன் குற்றம் தனக்குத் தெரியவில்லையோ?

கனவு தான்!

பூர்ண ஸ்வேச்சை வந்தால் எல்லாக் கோவில்களையும் திறந்து விடுவார்களே, அப்போது ஸனாதனிகள் என்ன செய்வார்களென்று ஸி. ஆர். கேட்கிறார். பூர்ண ஸ்வேச்சைக் கனவைப் பற்றி நாம் கவலைப்படவில்லை. இந்தியா-மந்திரி இந்தப் பிதற்றலுக்கு ஸரியான பதில் கொடுத்திருக்கிறார். ஆயினும், ஸனாதனிகள் கேட்பது நியாயம். பிரஜா உரிமை. ஸ்வேச்சை வந்தால், நியாயத்திற்கும். பிராஜா உரிமைக்கும் பங்கம் ஏற்படுவது நிச்சயமென்று ஸி. ஆர். பயமுறுத்துகிறார். அத்தகைய நிர்ப்பந்த ஆட்சி மூலம் தேவாலயங்கள் அழிக்கப் படுமாயின் யார் என்ன செய்ய முடியும்? போலந்தை பலாத்காரத்தினால் அழித்த ஹிட்லருக்கும், அபிஸினியாவை ஆக்ரமித்த முஸோலினிக்கும் உலகத்தில் என்ன கியாதி ஏற்பட்டுளதோ, அதுவே இந்தியச் சுயேச்சை வாதிகளுக்கும் கிடைக்கும். அத்தகைய காலத்தில் ஸனாதனிகள் எப்படி நடந்து கொள்வார்களென்பது பிறகே தெரியும்.

ஜகத் குரு ஸ்ரீ சங்கராசாரியர் ஸ்வாமிகள்.

கும்பகோணத்திற்கு விஜயம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகள் மக உத்ஸவத்தை முன்னிட்டு 22உ வியாழக்கிழமை இரவு கும்பகோணத்திற்கு விஜயம் செய்வார்கள். 4, 5 தினங்கள் வரை குடந்தையில் இருந்து விட்டுப் பிறகு வெளியூர் பிரயாணம் ஆரம்பமாகுமென்று தெரிகிறது.

ஆங்கில ஜன நாயக ஆட்சி இந்தியாவிற்கு ஏற்காது

ஜின்னா அபிப்பிராயம்

ஜனாப் ஜின்னா "டைம் அண்ட் டைட்" என்ற பத்திரிகையில் எழுதியுள்ள வியாஸமொன்றில் இந்தியாவிற்கு ஜனநாயக ஆட்சி முறை ஏற்றதல்லவென்பதை விவரித்துள்ளார். இந்தியாவில் பற்பல ஜாதிமத வகுப்பினர் இருப்பதால் இங்கிலாந்தில்போல் இங்கு ஜனநாயகம் வெற்றிதராதென்றும், மெஜாரிடிக் கக்ஷி ஆக்ஷியை இந்தியாவில் நடத்தக்கூடாதென்றும், அதற்குப் பதிலாக பொதுஜனங்கள் யாவருக்கும் பொதுவாயுள்ள ஒரு கவர்ன்மென்டே ஆக்ஷிபுரியவேணுமென்றும் கூறுகிறார்.

காங்கிரஸ் மந்திரிஸபையைப்பற்றி அவர் கூறுகையில்:—

காங்கிரஸ் கக்ஷி அதிகாரமமதைகொண்டது காரியக்கமிட்டியானது தன்னை ஒரு கவர்ன்மெண்டாக நினைத்துக்கொண்டு விட்டது. அங்காங்கு ஸர்வாதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். மந்திரிகள் எந்த எதிர்ப்பையும் லக்ஷ்யம் செய்யாமல் கார்யம் நடத்திக்கொண்டுபோனார்கள்,

இந்திய ராஜ்ய வாழ்வில் பெரிய அமளி ஏற்பட்டதற்கு இதுவே காரணம்"

கோவிலூர் வர்ணாஸ்ரம ஸ்வயராஜ்ய ஸங்கம்

பொதுக்கூட்டம்

15—2—40 வியாழக்கிழமை மாலை 9 மணிக்கு மேற்படி சபையின் பொதுக் கூட்டம் கழனி வாசலில் நடை பெற்றது. பிரும்மஸ்ரீ கே. கணபதி அய்யர் அவர்கள் தலைமை வகித்தார். பின்னர் ஸ்ரீமான்கள் வி. வீ. ரெங்கநாத சாஸ்திரிகள் மன்னார்குடி தர்க வித்வான் ராமபத்ராசாரியார் குன்னக்குடி கே என். சுப்பிரமண்ய சாஸ்திரிகள் காரைக்குடி ஜில்லா வ. சு. ஸங்க பிரசார கமிட்டி காரியதரிசிகளான செ. வு. மெ. மெய்யப்ப செட்டியார் டி. பி. ஜகதீசய்யர் மற்றும் எம். நாராயண அய்யர் கே. எஸ். விஸ்வநாதய்யர் கே. எஸ் ஆத்மநாத அய்யர் முதலியோர் பசுமரத்தில் ஆணிஅரைந்தார் போல் சொற்பொழி வாற்றினார்கள்.

டி. பி. ஜகதீசய்யர் பேசும் பொழுது காங்கிரஸ்காரர்கள் அட்டூழ்யத்தைப் பற்றி கண்டித்து விரிவாக பேசினார்கள்.

பின்னர் இரவு 2-மணிக்கு காரியதரிசி கே. எ. ராமசாமியால் யாவருக்கும் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது நிறைவேறியது.

மற்றொரு பொதுக்கூட்டம்

16—2—40 வெள்ளிக்கிழமை மாலை 8½ மணிக்கு கோவிலூர் வித்யாசாலைக்கு முன்புறம் உ. ப. வே. மன்னார்குடி தர்க வித்வான் ராமபத்ராசாரியார் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடை பெற்றது. மேற்படி கூட்டத்திற்கு அநேக ஆஸ்திக பெரியோர்களும் இளைஞர்களும் ஸ்திரீகளும் விஜயம் செய்திருந்தது மிகவும் போற்றத் தக்கது,

ஸ்ரீமான்கள் R. விஸ்வநாதய்யர் வி. ராமமூர்த்தி, காரியதரிசி கே. எ. ராமசாமி, வி. வீ. ரெங்கநாத சாஸ்திரிகள் அப்பா, வைத்தினாத சாஸ்திரிகள் சபையோர் மனது உருகும்படி சொற்பொழிவு செய்த பின்னர் சபையோர்கள் தலைவர் அவர்களை பேசும்படி வேண்டிக் கொண்டதின் பேரில் 1-30 மணி நேரம் இளைஞர்களுக்கும் ஆஸ்திகர்களுக்கும் உணர்ச்சி ததும்பும்படியாக உபந்யாசம் செய்தார். பின்னர் ஆர். எஸ். கிருஷ்ணஸாமி அய்யர் அவர்கள் கம்பீரமாய் ½மணி நேரம் பசுமரத்தில் ஆணி அரைந்தார் போல் பேசினார்.

பின்னர் இரவு 12 மணிக்கு யாவருக்கும் ரெங்கநாத சாஸ்திரிகளால் வந்தனோபசாரம் கூற கூட்டம் கரகோஷத்துடன் கலைந்தது.

காரியதரிசி

ஸ்ரீமான் அய்யுவய்யர் காலமானார்

சிறந்ததார்மிகராகிய ஸ்ரீமான் அய்யுவய்யர் 85வது வயதில் சென்ற ஞாயிற்றுகிழமையன்று தஞ்சையில் காலஞ்சென்ற ஸமாசாரத்தையறிந்து விசனிக்கிறோம்.

மேற்படியார் பழமார் நேரியில் பெரிய குடும்பத்தில் பிறந்தவர். அன்னார் சீலமும் ஆசாரமும் தார்மீக சிந்தையுமுள்ளவர். அவர்களுடைய தர்மங்களை பற்றி பலர்களும் நன்றி அறிவார்கள். மேற்படியார் கும்பகோணம் அத்வைதஸபை கவுன்ஸில் டிரஸ்டியாக நியமித்து ரூ 63,500/- மூலாதாரமாக வைத்து தன்பெயராலும் தன் பத்னியின் பெயராலும் ஒரு அத்வைதவேதாந்த பாடசாலை ஏற்படுத்தச் செய்தும், கோடைகாலங்களில் தண்ணீர்பந்தல் வைக்கும்படிக்கும் இன்னும் பலதர்மங்களை நடத்தும்படிக்கும் ஏற்பாடு செய்திருக்கிறார் மேற்படி பாடசாலையும் தர்மங்களும் சில வருஷங்களாக சிறப்பாக நடந்து வருகின்றன. பழமார் நேரியிலுள்ள தனக்குச்சொந்தமான பெரியவீட்டையும் தர்மத்தில் சேர்த்திருக்கிறார்.

பழனி ஸ்ரீ தண்டாயுதபாணிஸ்வாமிக்கு ஜேஷ்டாபிஷேகட்டளையும் ஏற்படுத்தியிருக்கிறார். இவருடைய குமாரத்தியும், மேற்கண்ட தர்மங்களுக்கு முக்யகாரணமாயிருந்து செய்து கொடுத்தவருமாகிய ஸ்ரீமதி சிவகாமி அம்மாளுக்கும் ஸ்ரீ அய்யருடைய ஸ்வீகார குமாரருக்கும் நமதுவருத்தத்தை தெரிவித்து கொள்கிறோம் (ந.கி.)

தஞ்சையில் அநுதாபக் கூட்டம்

16—2—40 வெள்ளிக்கிழமை மாலை 6½ மணிக்கு மகா ஜனங்கள், காலம் சென்ற மகா மகோபாத்யாய பிரும்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளின் குடும்பதாருக்கு அநுதாபம் தெரிவிக்க, கல்யாண சுந்தரம் உயர்தரக் கலாசாலையில் கூடினர். தலைமை வகித்த வக்கீல் ஸ்ரீராத கிருஷ்ணையரவர்கள் சாஸ்திரிகளின் பிரிவினால் கற்றோருலகம் படுந்துயரை விரித்துரைத்து, முன்னுரையை முடித்துக் கொண்டார்.

பிறகு சாஸ்திரிகளின் சிஷ்யர்ராமாயணம் ஸ்ரீதியாகராஜ சாஸ்திரிகள் பேசினார்.

அப்பால், ரிடயர்ட் ஜில்லா ரிஜிஸ்ட்ரார் ஸ்ரீநாகராஜ ராவ், வக்கீல் ஸ்ரீராமசேஷய்யர் ஸ்ரீதசரத ராம சாஸ்திரிகள், ஸ்ரீவிச்வநாத சாஸ்திரிகள் முதலியோர் சாஸ்திரிகளின் சிறப்பையும் அவர் போனதால் வடமொழி யுலகினைத் தாக்கிய நீக்க வொண்ணாத்துக்க அதிர்ச்சியையும் குறிப்பிட்டார்கள்.

தலைவர் தம் பின்னுரைக்கு பிறகு கடைசியாக, சாஸ்திரிகளின் மூத்த புதல்வர் கவி ஸ்ரீ மகாலிங்க சாஸ்திரிகளுக்கு அநுதாப லிகிதத்தைச் சேர்ப்பிப் பதாகத் தீர்மானித்தவுடன். இரவு சுமா. 9¼ மணிக்குக் கூட்டம் கலைந்தது. (ந.கி.)

மன்னார்குடியில் அநுதாபக்கூட்டம்

பிரம்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய யக்ஞ ஸ்வாமி சாஸ்திரிகளவர்களின் தேஹவியோகத்தைக்குறித்து நேஷனல் ஹை ஸ்கூலில் 9—2—40 ஒரு கூட்டம் கூடியது. ஹெட் மாஸ்டர் எஸ். வைத்யநாதய்யர் அவர்களால் ஷை சாஸ்திரிகளின் குணாதிசயங்கள் வர்ணிக்கப்பட்டன. ஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களின் அபாரமான யோக்யதையால் அவர்களின் பிதாமஹாளான பெரிய சாஸ்திரிகள் அவர்களின் ஞாபகம் யாவருக்கும் வந்து கொண்டு இருந்தது என்பதையும் அவாள் இரண்டுபேர்களுக்கும் தமது ஹை ஸ்கூலில் உருப்படம் திறந்துவைக்கப்பட்டுவிட்டார். ப்ரம்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களின் சிஷ்யரான மேலக்காவேரி வ சிவராமசாஸ்திரியவர்களால் ராமாயணப்ரவசன சமயத்தில் அவர்களின் அரியகுணாதிசயங்கள் வர்ணிக்கப்பட்டன. அவாளுடைய வியோகம் பண்டித உலகத்திற்கு பெரிய நஷ்டமென்றும் பகவானுடையக்ருபையால் அத்தகைய பெரியவித்வான்கள் உலகில் தோன்றி உபகாரம் செய்யுமாறு ஸர்வேச்ரனைப் பிரார்த்திப்போமாக என்று கூறினர், ந.கி.

மதுரை யுவஜன ஸங்கம்

அநுதாபத் தீர்மானம்

மதுரை காக்காத் தோப்பில் பிரம்மஸ்ரீ வ. வெங்கட ஸுப்பிரமணிய சாஸ்திரிகளின் தலைமையில் யுவஜன ஸங்கமொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

பிரதி கார்த்திகை தோறும் பஜனை, உபந்யாஸம், ஹரிகதை நடத்துவதுடன், அபேக்ஷிப்பவர்களுக்கு மூன்று வேத ஸந்தியா வந்தனம், ருத்ரம், ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி கிருதிகளுக்கு அர்த்தம், முதலிய வைகள் சொல்லிக் கொடுக்கப்படும்.

16உ வெள்ளிக்கிழமை நடந்த ஸங்கக் கூட்டத்தில், மஹா மஹோபாத்யாய ஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளின் தேஹ வியோகத்திற்கு வருந்தி, அவாள் குமாரர் ஸ்ரீ மகாலிங்க சாஸ்திரியாருக்கும், மற்ற குடும்பத்தார்களுக்கும் அநுதாபம் தெரிவிக்க வேண்டுமென்ற தீர்மானம், ஸ்ரீ வெங்கட ஸுப்பிரமணிய சாஸ்திரியாரின் பிரேரேபணை மீது நிறைவேறியது.

ஸ்ரீமதி குமாரி, ஜானகி, கடயநல்லூர் கோபாலகிருஷ்ண பாகவதர், சீர்காழி வெங்கடராமய்யர் அடங்கிய கோஷ்டியாரால் கார்த்திகை பஜனை ஸங்கீத கச்சேரி நடைபெற்றது.

அக்கிராஸனர்.

திண்டுக்கல்

ஸனாதன பிரசங்கம்

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் ஆதரவில் சென்ற ஞாயிற்றுக் கிழமை 11-2-40 யன்று ஸ்ரீ ஜகத்குருமடத்தில் ப்ரம்மஸ்ரீ பி. ஹநுமந்த ராவ், பி. ஏ., அவர்கள் ஆங்கிலத்தில் "யக்ஞோபவீதமும் அதன்தத்வமும்" என்பதைப் பற்றி ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினர், அவ்வமயம் ஸ்ரீமான் என். ஸுப்ரமண்ய ஐயர் அவர்கள், பி. ஏ., எல். டி. அக்ராஸனம் வகித்தார்கள். உபன்யாஸகரவர்கள் த்ரைவர்ணிகளுக்கு யக்ஞாதி

(தொடர்ச்சி 3-கலம் பார்க்க)

ஹிந்துதர்ம ஸித்தாந்த ஸபை. ஸைதாபேட்டை.

பொதுக்கூட்டம்.

ஷை ஸபையின் ஆதரவில் தை-மீ 28உ பெருமாள் கோவிலில் ஸ்ரீ ஜகன்னாத பந்துலுவின் தலைமையில் ஸஹஸ்ரநாம பாராயணமும், ஸ்ரீமான் வைத்யநாதய்யரால் பஜனையும் நடந்தபின் பொதுக்கூட்டம் ஆரம்பமாகியது. ஸ்ரீமான் ரங்கமன்னார் முதலியார் தலைமைவகித்து, தற்கால நிலைமையையும், தர்ம பிரசார அவச்யத்தையும் பேசினர்.

தார்மிக ஹிந்து பத்திராதிபர் ஸ்ரீ து. க ஜகன்னாதாசாரியார் ஸனாதனிகளின்கடமையைப்பற்றிப் பிரஸங்கம் செய்தார்.

ஆத்தூர் மஹாநாட்டில் டாக்டர் ராஜன் ஸனாதனிகளைப் பரிஹஸித்துப் பேசியதைக் கண்டித்தும், மதுரை ஸத்யாக்ரஹத்தை ஆதரிப்பதாயும், சுக்கூர் ஹிந்துக்களிடம் அநுதாபம் காட்டுவதாயும், அநேக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஸ்ரீ ஆராவமுதய்யங்காரால் வந்தனோபசாரம் கூறப்பட்டு ஸபை இனிதாக முடிந்தது.

ஆலயப்பிரவேசச் சட்ட கண்டனம்

சீர்காழியில் கூட்டம்

13—2—40உ அன்று மாலை 5½ மணிக்கு தாடாளன் கோவிலில் ஸ்ரீ லோகநாயகி அம்மன் ஸன்னிதியில் ஓர் ஸபை கூடி ஆலயப்பிரவேச எதிர்ப்பு விஷயமாய் பேசப்பட்டது. அச்சபைக்கு சபா நாயகராக, சீர்காழி வித்வத் ஸ்ரீமான் உ. வே. ஸ்ரீ சுந்தராசாரிய சுவாமிகள் அவர்கள் விளங்கினர்கள்.

முதலில் சபா நாயகரவர்கள் சுவராஜ்யமென்பதை நன்கு விளக்கினர்கள். பின்னர் மதுரையிலிருந்து வந்திருந்த ஓர் ஸ்திரீ ரத்னமும், அகில வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்க பிரசிடெண்டு மதுரை வக்கீல் ராவ்ஸாஹிப் ஸ்ரீ நடேசய்யரவர்களும், ஸ்ரீ வில்லிபுத்தூரிலிருந்து வந்திருந்த ஓர் நாரீமணியும், மதுரையிலிருந்து வந்திருந்த ஷை சங்க காரியதரிசியவர்களும் மதுரையில் நடந்ததான திண்டாதாரின் துராகிருதமான திருட்டு ஆலயப்பிரவேச விஷயமாய் 1½ மணி நேரம் பேசினர்கள்.

மேற்கூறிய ஸ்திரீ ரத்னங்களும் மதுரையில் நடந்த விஷயங்களும், திருப்பரன் குன்ற விஷயமும், நன்கு எடுத்துக்கூறியதோடு, வர்ணாச்ரம சுவராஜ்ய சங்கத்தின் ஆதரவின்கீழ் மாதர்களின் சங்கமொன்றும் கூடல் வேண்டுமென்றும், மாதர்கள் நவீனசாரத்தை நாசமாக்கி, பார்சீனசாரத்தையே கைப்பிடித்து, பாரத பாகவத, இராமாயணாதி, சிரவணம் செய்து, கற்பிற் கழிவில்லாது தெய்வபக்தி, ஆசார்யபக்தி, பதிபக்தி களிற் சிறிதும் குறையாது, புருஷர்களுடன் நாமும் ஒத்து உழைத்து வரல்வேண்டுமென்றும், 15 நாட்களுக்கு ஒருமுறையோ, மாதம் ஒருமுறையோ தவறாமல் மாதர்களின் சங்கம் அவசியம் கூடல் வேண்டுமென்றும், அவரவர் தன் மதா சாரங்களில் ஒரு சிறிதும் தவறுதல் கூடாதென்றும் பேசினர்கள். (ந.கி.)

அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய ஸங்கம்

காரைக்குடி ஜில்லா

வேதநெறி தழைத்தோங்க பல்லாண்டுகளாய் குறிப்பாக தனவணிக சமூகத்தினர் தேவாலயத் திருப்பணி வேதாகம பாடசாலை, நந்தவனம் முதலான திருப்பணிச் செய்து பரிபாலித்து வருவது கண்கூடு. ஆஸ்திகவளர்ச்சிக்கு ஆங்காங்கு சில சங்கங்கள் தோன்றியிருப்பினும் தற்கால சீர்கேடான நிலைமையைப் போக்கக் கட்டுப்படான தீவிரப்பிசாரம் பிரசங்க வாயிலாகவும் பத்திரிகை மூலமாகவும் வேண்டியது தவச்யம். வைதிக மத பிரசாரத்தை சிறந்த நோக்கமாக சுமார் 20 வருஷத்திற்கதிகமாகக் கொண்டு உழைத்துவரும் நமது ஆர்யதர்ம பத்திரிகைக்கு வாயளவில்லாமல் செயலில் பெருத்த ஆதரவு அளிக்க வேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும்

சிலவருஷகாலமாய் செட்டிமார் நாட்டில் ஸநாதனிகளின் மஹா நாட்டைக் கூட்ட அவா கொண்டவர்களின் மனோரதம் பிரமாதிஷு தைமாசம் 7உ கோட்டையூரில் ஆஸ்திகத்திலகம் ஸ்ரீ க.வி.சொ.வீ. அழகப்பசெட்டியாரவர்களின் பெருமித்த ஆதரவால் பூர்த்தி ஆயிற்று. சென்னை மாகாணத்தின் நானுபக்கங்களிலிருந்தும் வந்துள்ள ஆஸ்திகர்களும்குறிப்பாக தனவணிகபெருமக்களும் மஹாநாட்டை சிறப்புறச் செய்தனர். அம்மகாநாட்டில் அமைக்கப்பட்டது காரைக்குடி ஜில்லா வர்ணாச்ரமசுய ராஜ்ய சங்கம். அக்கமிட்டி செட்டியார் நாட்டிலுள்ள பிரமுகர்களை அங்கத்தினர்களாகக் கொண்டது.

14-2-40ல் காரைக்குடியில் ஷை ஜில்லா கமிட்டி கூடிற்று தேவகோட்டை ஸ்ரீ கரு. கி. சொர்னநாதன் செட்டியாரவர்கள் தலைவராகவும், கரைக்குடி ஸ்ரீ மெ செ ச சிதம்பரஞ்செட்டியா ரவர்கள் பொக்கிஷதாராகவும் பிரசாரகமிட்டிக்கு தேவகோட்டை ஸ்ரீ அழ. சுப. பழ. சுப்பிரமணியஞ் செட்டியாரவர்கள் அக்கிராஸன ராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். முதல் பிரசாரக் கூட்டம் கழனிவாசலில் 15-2-40ல் ஆரம்ப மாயிற்று.

வைதிக மார்க்கத்தைப் பிரசாரம் செய்வதும் சட்டசபைகள் மதசமூக விஷயங்களில் தலையிடுவதைக் கண்டிப்பதும் இந்திய நட்டிற்குகந்த நல்லரசியலை ஸ்தாபிப்பதையும் நோக்கமாகக் கொண்டது அகில இந்தியவர்ணாச்ரம சுயராஜ்ய சங்கம்.

கிராமங்கள் தோறும் கிளைச் சங்கங்கள் நிருவவேண்டும். ஜில்லாகமிட்டிகள் அமைக்கப் படவேண்டும். தீவிரப் பிரசாரம் செய்தாக வேண்டும். வைதிக மதபேரன்பர்கள் காலத்தை உணர்ந்து கட்டுப் பாடுடன் வேலை செய்ய வேண்டிய அவசியத்தைக் கவனித்து சங்கத்தின் லக்ஷியம் நிறைவேற முன் வரும்படி வேண்டுகிறேன்.

டி. பி. ஜகதீசய்யர், கார்யதரிசி.

(1வது கலம் தொடர்ச்சி)

காரத்தைக் காட்டும் பொருட்டு ஏற்பட்ட ப்ரம்ஹ ஸூத்ரத்தின் மகிமையைப்பற்றியும் அதன்தத்வார்த்தத்தை "ப்ரம்ஹோபநிஷத்"தில்கூறியபடிஎடுத்துரைத்தார். அநேகமற்ற அங்கத்தினர்களும் அவ்விஷயத்தைப்பற்றிப் பேசினர்கள். வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது. (ந-கி)

அஹிம்ஸையைப் போல் அவச்ய ஹிம்ஸையும் தர்மமே.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

களும், கௌரவப்பட்டங்களும் அளிக்கப்படுகின்றன. ஸாதாரணக் கொலைக்கும் யுத்தக் கொலைக்கும் என்னவாசி? இரண்டிலும் கொலை செய்யப்பட்டவன் தனது அருமையான பிராணனை இழப்பது ஸமமாகவே இருக்கிறது. அப்படியிருந்தும் ஸாதாரணக் கொலையை அதர்மமென்று தண்டிப்பதற்கும், யுத்தக் கொலையை தர்மமென்று கௌரவிப்பதற்கும் யுக்தி வாதம் பிரயோஜனப்படுமா? சாஸ்திரம் தானேகதி?

தற்போதிய யுத்தம்

தற்போது நடக்கும் ஐரோப்பிய யுத்தத்தில் கூட "தர்ம யுத்தம்" என்றமொழியை எல்லோரும் உபயோகிக்கிறார்கள். கொலை செய்வதில் தர்மமென்ன? யுத்தக் கொலையில் வெற்றியடைய எவ்வளவு ஸாதனங்கள் இக்காலத்தில் கண்டு பிடிக்கப்படுகின்றன? இந்தக் கொலைத் தொழிலைக் கற்றுக்கொடுக்க எவ்வளவு காலேஜ்கள்? இந்த தொழிலைக் கற்க ஹிந்துக்கள் போடும் போட்டியெவ்வளவு? அஹிம்ஸா வாதியான காந்தியும், காங்கிரஸும்கூட ராணுவத்தில் இந்தியர்களே இருக்க வேண்டுமென்று கேட்கவில்லையா? ஆகையால் 20-வது நூற்றாண்டில் கூட யுத்த ஹிம்ஸை தர்மமாகவே எல்லோராலும் மதிக்கப்படுவதால் இது அவசிய ஹிம்ஸையாகிற தர்மத்தில் சேர்ந்ததென்பதை ஹிந்து மதமும் சொல்லுவதில் தப்பென்ன?

தவிக்க முடியாத ஹிம்ஸைகள்

மேலும் உலக ஸ்வபாவத்தில் இயற்கையாயுள்ள பல அவசிய ஹிம்ஸைகளை ஒரு மதத்தினரும் தவிர்க்க முடியாது. அவைகளை அங்கீகரித்தே ஆகவேண்டும். கிருஷித் தொழிலில் ஹிம்ஸை அதிகம். பூமியை உழும் காலத்தில் பற்பல பிராணிகள் அடிப்பட்டு இறந்து போகின்றன. இது யாவரும் அங்கீகரித்த அவசிய ஹிம்ஸை. தவிர்க்க முடியாதது. மனிதன், ஸஞ்சரிக்கும்போதும், வண்டி முதலியவைகளில் போகும் போதும் பூமியில் ஸஞ்சரிக்கும் பற்பல சிறிய ஜீவராசிகள் தெரிந்தும் தெரியாமலும். கொல்லப்படுவது மறைக்கக் கூடியதல்ல

தேள், பாம்பு, புலி, சிங்கம் போன்ற துஷ்டஜந்துக்கள் எங்கு கண்டாலும் கொல்லப் படுவது இயற்கையாயிருக்கிறது.மனிதனுடைய நன்மைக்காக அவைகளைக்கொல்லுவது தர்மமா? துஷ்டஜந்துக்களும் பிராணிகள்தானே? ஈச்ரவரஸிருஷ்டியில் எல்லாம் ஸமம்தானே? மனிதன் உயிர் பெரிதாகவும், துஷ்டஜந்துக்களின் உயிர் லேசாகவும் நினைக்க ஆதார மென்ன? இது அஹிம்ஸைக்கு எற்றதா? ஆயினும் அஹிம்ஸாவாதிகள் கூட இந்த அவச்யஹிம்ஸையை ஒப்புக் கொள்ளுகிறார்கள். ராஜ தர்மத்தில் அரசன் வேட்டையாடுவது ஒரு தர்மமாகக் கூறப்படுகிறது. துஷ்ட ஜந்துக்களை ஒழிப்பதே வேட்டையின் நோக்கம். இம் மாதிரி உலகத்தாலும், சாஸ்திரத்தாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட அவச்யஹிம்ஸைகள் பல இருப்பதால் ஹிந்து மதத்தில் பூர்ண அஹிம்ஸை அங்கீகரிக்கப் படவில்லை யென்பது தெளிவு.

வைதிக மதத்தில் எல்லாஸ்மிருதி காரர்களும் கல்பஸூத்ரக் காரர்களும், விவாஹம் முதலிய சுபகர் மாக்களில்"மது பர்க்கம்" என்ற காரியத்தைச் சொல்லியிருக்கிறார்கள், இந்த" மதுபர்க்க, தர்மத்தில் பிராணி ஹிம்ஸை சிறந்த தர்மமாக எல்லா ரிஷிகளும் கல்பஸூத்திரங்களில் விதித்துள்ளார். கவிகளும் பேசுகிறார்கள்.

மனுவானவர்

योऽहिंसकानि भूतानि हिनस्ति आत्मसुखेच्छया ॥

என்பதால், ஹிம்ஸை செய்யாமலிருக்கிற பிராணிகளைத்தான் கொல்லக்கூடாதென்று விதிக்கிறார். ஆதலால், தன்னை, ஹிம்ஸை செய்யும் நோக்கத்துடன் எதிர்த்து வருகிற பிராணியை ஒருவன் பதிலுக்கு ஹிம்ஸை செய்வதும் அவச்ய ஹிம்ஸையில் சேர்ந்ததாகிறது. "தன்னைக் கொல்ல வந்த பசுவைக் கொல்லு" என்ற பழமொழி ஹிந்து ஸமூஹத்தில் ஊன்றி நிற்பதின் நியாயத்தையும் கவனிக்கவும்.

आततायिनमायान्तं जिघांसंतं जिघांसीयात न तेन ब्रह्महाभवेत् ॥

என்பது போன்ற வசனங்களால் தன்னைக் கொல்லும் உத்தேசத்துடன் எதிர் நோக்கி வருகிற பிராம்மணைக் கொல்லலாமென்றும், அதனால் பிர்ம்மஹத்யா தோஷம் எற்படுவதில்லை யென்றும் ஸ்மிருதிகாரர்கள் தெளிவாகக் கூறுகிறார்கள்.

இதிலிருந்து, நம்மை ஹிம்ஸிப்பவர்களைக் கூட நாம் எதிர்க்காமல்அஹிம்ஸைக் கொள்கையை முன்னிட்டு நபும்ஸகர்களாக யிருக்கும்படி ஹிந்து மதம் போதிக்கவில்லை யென்று நிச்சயிக்கலாம்.

यथाशक्ति निगृह्णीयात् देवतागुरुनिन्दकान् ॥

என்ற வசனமானது தெய்வங்களையும், ஆசார்யர்களையும் நிந்திக்கிறவன் விஷயத்தில் பலாத்காரத்தைப் பிரயோகிக்க அநுமதி கொடுப்பதும் கவனிக்கத்தக்கது.

மனதினாலும், வாக்கினாலும், செய்கைகளாலும் ஒருவனுக்கு அபகாரமோ, பலாத்காரமோ இழைப்பதும் ஹிம்ஸை தானென்பதும் ஹிந்து மதக் கொள்கையே ஆயினும் இது நிரபராதி விஷயத்திலேயே தகும். அபராதிகள் விஷயத்தில் இந்த அஹிம்ஸையை வரையறையின்றி ஆசரிக்கும்படி சாஸ்திரம் எங்கும் சொல்லக்காணோம்.

ராஜ தர்மத்தில் விதிக்கப்பட்டுள்ள தண்டனை நீதிகளும் அவசிய ஹிம்ஸையில் சேர்ந்த தர்மங்களேயாகும். தண்டனை முறைகள் மனிதனுக்கு ஹிம்ஸை செய்யக் கூடியவைகளே. ஆயினும் அஹிம்ஸை கொள்கையை முன்னிட்டு தண்டநீதியை கைவிடமுடியுமா? அப்படிசெய்தால் பிரஜைகள் அமைதியாக வாழ முடியுமா? கொலைக் குற்றம் புரிந்தவனை வதம் செய்யாமல் அஹிம்ஸைக் கொள்கையை முன்னிட்டு மன்னித்து விடுவது அதர்மமல்லவா? கொல்லுவதல்லவோ தர்மமாகிறது? மரண தண்டனை விதிக்கும்படி வாதாடிய வக்கீலும், மரண தண்டனை விதித்த ஜட்ஜியும் தாங்கள் தர்மமாயும், புனிதமாயுமுள்ள கடமையைச் செய்ததாகவே பெருமைப் படுகிறார்களல்லவா? இங்கு அஹிம்ஸை அதர்மமாகி வடுவதை கவனிக்கவேணும் சாஸ்திரங்கள், க்ருச்ரம், சாந்திராயணம், உபவாஸம், தபஸ் போன்ற வைதிகமான பிராயச்சித்த தண்டனைகளை விதிக்கின்றன. இவைகளும் மனிதனுக்கு ஹிம்ஸைகளேயல்லவா? ஆயினும் இந்த ஹிம்ஸைகள் அவச்ய ஹிம்ஸைகளாயும், தர்மங்களாயுமே கருதப்படுகின்றன. அஹிம்ஸா வாதத்திற்கு முக்யத்வம் கொடுத்து விட்டால் மேற்கண்ட ஹிம்ஸா முறையான தர்மங்களை யெல்லாம் கைவிடவே நேரும். அதனால் உலகவ்யவஸ்தையும் அழியும்.

ஸ்தாவரங்களிலும் ஹிம்ஸை

மேலும் காந்தியின் அஹிம்ஸையானது ஜங்கம பிராணிகளிடம் மட்டுமே நிற்கிறது வைதிகமதமானது ஸ்தாவரமான, மரம்செடி கொடி,முதலியவைகளிலும்ஜீவன் இருப்பதை ஒப்புக் கொண்டு அவைகளையும் ஹிம்ஸிக்கக்கூடாதென்றே தடுக்கிறது ஹிம்ஸிப்பவர்களுக்கு பிராயச்சித்தமும் விதிக்கிறது. ஆயினும் ஆஹாராதிகாரணங்களையுத் தேசித்து இந்த அவசிய ஹிம்ஸையை பிராயச்சித்தத்துடன் சாஸ்திரம் அநுமதிக்கிறது ஆதலால் வைதிக ஹிந்து மததத்வங்களை எவ்வளவு சோதித்துப் பார்தாலும், அஹிம்ஸையை வரையறையின்றியோ, விலக்கு விதியன்றியோ எங்கும் கண்மூடித்தனமான ஆசரிக்க இடமில்லை வென்பதும்,அஹிம்ஸையைப் போல் அவசிய ஹிம்ஸையும் இந்து மதத்தில் தர்மமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறதென்றும் ஸந்தேகமின்றி வெளியாகும்.

இவ்விஷயமாக இன்னும் சில விஷயங்களை மற்றொரு வியாஸத்தில் விவரிப்போம். முன் காலத்தில் ஜைன, பௌத்தங்களின் அர்த்தமற்ற அஹிம்ஸைக் கொள்கை பரவி வைதீக மதத்திற்கு உபத்திரவம் நேர்ந்த போது, வியாஸாதிரிஷிகளும் ஸ்ரீ சங்கர ராமானுஜாதிகளும் தோன்றி அவசிய ஹிம்ஸை உண்டென்றும் அது தர்மமென்றும் ஸ்தாபித்தார்கள். காந்தியத்தால் தேசத்தில் அகிம்ஸைப் பையித்தியப் பிடித்த பலர் நியாயமான வைதீக ஹிம்ஸா தர்மங்களைக் கூட எதிர்த்துக் கிளர்ச்சி செய்யப் புறப்பட்டிருக்கிறார்கள். நல்ல வேளையாக பௌத்த ஜைனக் கொள்கையான காந்திய அகிம்ஸைக்கு தேசத்தில் பலத்த எதிர்ப்புத் தோன்றி விட்டது. வைதீக இந்து மதத்தில் நியாயமான அவசிய ஹிம்ஸைகள் உண்டென்ற தத்வத்தை லௌகிதர்களே பிரசாரம் செய்ய முன் வந்து விட்டார்கள். இது வைதீக மதத்திற்கு நல்ல காலமே.

மாயவரம்
மஹா கும்பாபிஷேகம்

மயூரபுரம் என்னும் திவ்யக்ஷேத்திரத்தில் காவேரி நதியின் வடபுரத்தில் பெருமானகரம் என்னும் சேந்தங்குடி திவ்யஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கும், ஸ்ரீ கல்யாண்யம்பர ஸமேத ஸ்ரீ கைலாஸ நாதசுவாமிக்கும் மற்றுமுள்ள பரிவாரதேவதைகளுக்கும், ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீமத் பகவத்பாதாசார்யாளுடைய அனுக்கிரஹத்தினால் நாளது பிரமாதிஞு தை 30உ ஸோமவாரம் உத்திரட்டாதி நக்ஷத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் உதயாதி $13\frac{1}{4}$-நாழிகைக்கு மேல் விருஷப லக்னத்தில், அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் ஸ்ரீகாஞ்சீகாமகோடி பீடாதிபதி பகவத்பாதாசார்யாளே நேரிலிருந்து நடத்தியதாலும், பக்தகோடிகளை வரும் கும்பாபிஷேகதரிசனம்செய்து பேரானனந்தமடைந்தார்கள்.

பஞ்சாக்ஷர அகவல்
ஷடாக்ஷர அகவல்

அகத்திய மகா முனிவர் அருளிச்செய்த இவைகள் குருபதேச முறைப்படி பரிசோதித்து சுத்தப்பதிப்பாக பட்டீச்சுரம் நேடிவ் டாக்டர் ஸ்ரீமான் எம். கே. ஸாது ஸ்ரீ இராமஸ்வாமி சர்மா அவர்களால் பதிப்பிக்கப் பெற்றன. விலை அணா 4.

கிடைக்குமிடம் ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம், லிமிடெட்., கும்பகோணம்.

கடவுளை நம்பினோர் கைவிடப்படார்

ஓர் கதை

எஸ். கே. விஸ்வவேஸ்வர சாஸ்திரிகள்
(ரிடையர்டு ஸ்கூல் இன்ஸ்பெக்டர்)

கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதும், அவரவர்கள் எண்ணத்துக்குத் தக்கப்படி அவரவர்கள் கேட்கும் விதமே நடக்கவைத்து சிட்சையோ பரிபாலனமோ, உலகில் நடக்கிறதென்றும், அதிக ஆசை அதிக நஷ்டம் என்பதும் விளங்குகிறது. உலகத்தில் செல்வம் தரித்திரம் இந்த இரண்டிற்கும், நடுத்தரமான அந்தஸ்தே மேல் என்று கொள்ளலாம். (Cleobulus) கிளியாபுலஸ் என்ற மேல்நாட்டுப் பெரியார் ஒருவர் "Mediocrity is the best" "மிதமே மேல்" என்று கூறியுள்ளார். தமிழறிஞர்களும், எதிலும் மிதமாயிருத்தல் நன்மையென் கூறியிருக்கிறார்கள்.

பின் வரும் கதைமூலம் இதை விளக்குவோம்

மத்திய இந்தியாவில், சில இடங்களில் மழையே இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது இப்படித்தவிக்கும் ஓர் கிராமத்தில், கோவிந்தன், கேசவன், என்று இரண்டு இடைப் பையன்கள் இருந்தார்கள். கோவிந்தன் திடதேகம் உள்ளவன். தகப்பன்சாமிப் பேர்வழி. தான் தான் உலகம் என்று எண்ணுபவன் கேசவன் பலக்குறைவு, தெய்வம் ஒன்று இருக்கென்று நினைப்பவன், இவர்கள் தங்கள் நிலத்து எல்லையில் நின்றுகொண்டிருந்தார்கள், இவர்கள் ஆடுகளும் பக்கத்தில் இருந்தன.

கோவி. :— கேசவா! என்ன இப்படி வெயில் பத்தி எரியரதே! மழையைப் பார்த்து பல வருஷங்களாச்சு. எங்கும் ஒரே வறட்சை இதென்ன அநியாயம்! ஜலம் இல்லாமல் எல்லாம் அழியவேண்டுந் தான் போலிருக்கிறது.

கேசவன் :— அதற்கு நாமென்ன பண்ணரது? எல்லாம் சாமி செயல்.

கோ :— ஓ! சாமியுமாச்சு, பூதமுமாச்சு, உஞ்சாமி உலகத்தை நன்னா வைச்சிருக்கே, தண்ணியே இல்லாமல்.

கே. :—இதெல்லாம் அவரவர்கள் செய்யர பாவ புண்யத்தால்: பாவம் அதிகமானால் இப்படித்தான், வடக்கே (குவெட்டாவில்) எத்தனை பேர் ஆயிரக்கணக்காய் செத்தாங்கோ பூமி ஆடி, வெடிச்சு என்று சொல்லிக்கிட்டாங்களே இருந்தாலும் சுவாமி கருணை நிறைந்தவர் அப்படியே அழிய விடமாட்டார்.

கோ. :— இம்மே, சாமி, கீமி, என்று ஏதாவது சொன்னையோ, உன்னை என்ன பண்ணுவேன் தெரியுமா?

கே. :— சரி நான் ஒண்ணுமே சொல்லுலையப்பா இனி, கோவிந்தனுக்கு பயந்து, தன் மனதிற்குள்ளே தெய்வம் இறங்காதா, என்று சிந்தித்துக்கொண்டிருந்தான். கேசவன் நினைத்ததட்சணம் எங்கும் ஒரு எதிர்பாராத அமைதி உண்டாயிற்று. பட்சிகள் சப்திக்காமல் இருந்தன. காற்றோ ஓய்வுற்று இருந்தது. ஆடுகள் கத்தாமல் மௌனமாயிருந்தன இதைக் கண்டு வியப்புற்று, சுற்றிலும் விழித்துப் பார்த்தார்கள் இருவர்களும், கேசவன் பிரார்த்தனைக்கு இரங்கியோ, யாதோ! பகவான் வருவதுபோல், ஒரு அதிசய திவ்ய ரூபம் தோன்றிற்று தூரத்தில்.

கே. :— கோவிந்தா! அதோ தூரத்தில் யாரோ ஒரு பெரியவங்க வாரப்லே யிருக்கு பார்!

கோ. :— ஒஞ் சாமி தான் வருகுது என்று பரிகாஸம் செய்தான். ஒரு கையில் வேண்டியதைக் கொடுப்பேன் என்பதற்கு வேண்டிய குறியும் இன்னொரு கையில் சம்ஹாரம் பண்ணவேண்டிய அடையாளங்களும் இருப்பனபோல் தென்பட்டன. அந்த உருவம் கிட்ட வர வர இவர்களுக்கு சற்று பயம் உண்டாயிற்று. கோவிந்தன் ஓடிபோவோமா என்றவுடன் கேசவன் எதுக்கடா ஓடுகிறது? வந்து நம்மை என்னத்தான் செய்யும்? கொல்லத்தான் கொல்லட்டுமே, தாகத்தால் செத்தாலென்ன? அதன் கையால் செத்தாலென்ன இரண்டும் ஒன்றே. வெல்லம் தின்னு செத்தா என்ன? விஷம் தின்று செத்தால் என்ன என்பார்களே தெரியாதா? என்றான் கேசவன், கோவிந்தன் எனக்கு அப்படித் துணியவில்லை. ஓடித்தப்பினால் தேவலை என்று பயந்தவனாய்க் காண்பித்தான்.

இதற்குள் சமீபத்தில் வரும் அந்த உருவத்தின்று பின் வரும் வார்த்தைகள் குளிர்ந்த குரலில் கிளம்பின, "குழந்தைகளே பயம் வேண்டாம் உங்களுக்கு நன்மை செய்வற்காகவே வந்துக் கொண்டிருற்கிறேன. நீங்கள் வேண்டிய நல்ல வரனை என்னிடம் இருந்து பெற்றுக்கொள்ளுங்கள். நல்லதும் கெடுதலும் நீங்கள் கேட்டப்படி வினையுமேயொழிய வேறொன்றுமில்லை என்று சொல்லிக்கொண்டே கிட்ட வந்து அவர்களைத் தைரியப்படுத்தி நின்றார் அம்மானிடர். பயந்தோட எண்ணின கோவிந்தன், கேசவனைப் பார்த்து, நீ முதலில் கேள் என்றான் உனக்கென்ன வேண்டும்? ஜலந்தானே: எவ்வளவு ஜலம் வேண்டும் சொல் என்றார் கேசவனைப் பார்த்து அம்மனிதன், இன்னும் அவர் "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாம்." ஆகையால் எதுவும் மிதமாயிருக்கவேண்டும் சொல் அப்பா கேசவா உன் இஷ்டத்தை என்றார் அந்தப் பெரியார், தயவு கூர்ந்த பெரியாரே எங்கள் குழப்பத்திற்காக எங்களை மன்னிக்கவும் என்று வணங்கி தன் நிலத்தைக் காட்டி, இந்த இடத்தில் ஒரு சிறு வாய்க்கால் கோடையில் வறளாமலும், மாரியில் கரை வழிந்து ஓடாமலும் எப்போதும் தண்ணீர் ஓட ஏற்பாடு செய்யுங்கள் என்று வினயமாய்ச் சொல்லிக் கொண்டான் ஸரி அப்படியே ஆகட்டும் என்று சொல்லிக்கொண்டே, ஊத்துத் திறக்கும் இடமாய்ப்பார்த்தார் அம்மனிதர் தகுந்த இடத்தில் ஒரு கொம்பால் கீறி நினைத்த மாத்திரத்தில், பெண்ணை, பாலாறுகளில் கசம் (நடுவே வெட்டப்பட்டு ஓடும் கால்) போல் வாய்கால் உண்டாக்கினார். வெகு ஆச்சரியமடைந்தார்கள் இருவரும். உடனே ஆடுகளும் இவர்களும் தாகத்தைத் தீர்த்துக்கொண்டார்கள்.

அந்த உருவம் கோவிந்தனைப் பார்த்து, உனக்கு என்ன வேணும் என்றது எனக்கோ? தூரத்தில் கங்காநதி பிரவாகமாய்ஓடிக் கொண்டிருக்கு என்று சொல்லுகிறார்களே, அதுவே திரும்பி என் நிலத்தின் வழியாய் ஓடவேண்டும், இல்லையானால் அதிலிருந்து ஒரு கிளை ஆறு உண்டாகச்செய்து அதை என் நிலத்தின் மீது ஓடச்செய்யும் என்று அலட்சியமாய்ச் சொன்னான்.

இதற்குள் கேசவனுக்குத்தான் அவ்வளவு பெரிசாய்க் கேட்கத்த[illegible]றினேமே என்று உள்ளுக்குள் சற்று வியாகூலம் ஏற்பட்டது. கோவிந்தன் கேட்டதற்கு அப்பெரியவர், அப்பா நீ மிதமிஞ்சிக் கேட்கிறாய், அது எப்படி என்னாலாகும் என்றார்? கேசவனைப் போல், உனக்கு வேண்டியமட்டும் சிறிதாய்க் கேட்காமல் பெரியதாய்க் கேட்கிறாயே அது என்னால் ஆகவேண்டாமா? என்றார், என்ன சாமி உங்களைப் பார்த்தால் மனுஷ்யனோ: தேவனோ என்று கூட சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. இது முடியாதாம்! தெற்கே காவேரி என்று ஒரு பெரிய ஆறு இருக்கிறதாம், கேவலம் மனுஷ்யன் அதைக் கட்டிப்போட்டானாம். போ என்றால் போகிறதாம் நில் என்றால் நிற்கிறதாம், சொன்னப்படி ஆடுதாம் காவேரியம்மன், இப்போ சில வருஷமாய் கேசவன் கேட்ட உடனே வாய்க்கால் உண்டாக்கியூட்டேளே எனக்கு மாத்ரம் முடியாதோ? உங்களிஷ்டம், எனக்கு என் இஷ்டப்படி தான் வேண்டும் என்று சொல்லி முடித்தான். உள்ளுக்குள் வரன் கேட்டபடி உண்டானால் கேசவனைவிட ஒசத்தி ஆகலாம் என்று மகிழ்ச்சியடைந்தான். கோவிந்தன். வந்த பெரியவரும் சற்று தூரத்தில் போனார். இதை ஆச்சரியத்தோடு என்னநடக்குமோ என்று பார்த்துக்கொண்டிருந்தார்கள் பெருமையோடு கோவிந்தனும், சற்று மனப்புழுக்கத்தோடு கேசவனும். அந்த மனுஷ்யர் தென்மேற்காய் ஒரு பிரவாகத்தை உண்டாக்கினார். பேரிரைச்சலோடு பெருவெள்ளம், கங்கை தான் பொங்கி வழிகின்றதோ என்று நினைக்கும்படி ஓடிவந்து இவர்கள், எல்லாவற்றையும் அடித்துகொண்டு போயிற்று. அதில் வந்த ஒரு முதலை கோவிந்தனை விழுங்கிவிட்டது. அவன் ஆடுகளில் சில கரையில் அடித்தொதுக்கப்பட்டன. கேசவன் வெள்ளத்தால் உயிரோடு கரையில் ஒதுக்கப்பட்டான். அவன் ஆடுகளும் அவனைப்போலவே உயிரோடு கரையில் மோதப்பட்டன. வெள்ளம் வடிந்தவுடன், இவைகளுக்கெல்லாம் காரணமாயிருந்த வந்த உருவம் மறைந்து விட்டது. தன் ஆடுகளோடு தெய்வத்தின் மகிமையை நினைத்து மனமுருகுகிறான். இந்நிகழ்ச்சிகளெல்லாம் ஸ்வப்னம் போல் அவனைவிட்டு அகன்றன. பிறகு மழைத்தட்டு ஏற்படவில்லை. கேசவன் தன் காலத்தை நல்ல வழியில் கழித்து உயர்ந்த கதியடைந்தான்.

அல்லயன்ஸ் கம்பெனி பிரசுரங்கள்

திருப்புகழ் பாராயண திருமுறை	1	4	0
நால்வர் சரித்திரம் காலிகோ	0	12	0
" " ராப்பர்	0	10	0
பாரதசாரம்	1	2	0
ஸ்ரீ ராமாயண வினாவிடை	1	8	0
பஞ்சரதனம்	0	12	0
ஷண்முக விஜயம்	0	12	0
ஸ்ரீ பாலஷண்முக விஜயம்	0	8	0
ருக்மணி	0	8	0
தேசிங்குராஜன்	0	10	0
ராஜாதேசிங்கு	0	5	0
திருக்குறள் நீதிக்கதைகள்	0	10	0
தசகுமார சரித்திரம்	0	6	0
திருப்புகழ் ரத்னமாலை	0	3	0
கந்தலங்காரம்	0	2	0
திருஞான சம்பந்தர்	0	2	6
விசாரசன்மர்	0	3	0
மூர்த்தி நாயனார்	0	3	0
திருநாவுக்கரசர்	0	2	0
குகன்	0	4	0
திருவகுப்பு	0	4	0
பாராயணத் திருப்புகழ்	0	2	0
வேல், மயில் விருத்தம்	0	1	0
திருப்புகழ் விருத்தியுரை	8	0	0
திராவிட வேதத்திரட்டு	3	8	0

கிடைக்குமிடம்.— ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்,

Printed by S. Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.